Tamil | தமிழ்

# குழந்தை பாதுகாப்பு தரநிலைகளுக்கான சிறு வழிகாட்டி

பதிப்பு 1.10 • ஏப்ரல் 2023

COMMISSION FOR CHILDREN AND YOUNG PEOPLE

குழந்தைகள் மற்றும் இளம்வயதினர்களுக்கான ஆணையம்

# உள்ளடக்கம்

பின்னணி ........ 3

இந்த வழிகாட்டியை எவ்வாறு பயன்படுத்துவது ........ 4

தரநிலை 1: கலாசார ரீதியாக பாதுகாப்பான சூழலை நிறுவனங்கள் உருவாக்க வேண்டும், இதில் பழங்குடியின குழந்தைகள் மற்றும் இளம்வயதினர்களின் மாறுபட்ட மற்றும் தனித்துவமான அடையாளங்கள் மற்றும் அனுபவங்கள்மதிக்கப்படவும் ஆதரிக்கப்படவும் வேண்டும். ........ 6

தரநிலை 2: குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு நிறுவனத்தின் தலைமை, நிர்வாகம் மற்றும் கலாசாரத்தில் பதித்துவைக்கப்பட்டுள்ளது ........ 14

தரநிலை 3: குழந்தைகள் மற்றும் இளம்வயதினர்கள் தங்கள் உரிமைகள், தங்களைப் பாதிக்கும் முடிவுகளில் பங்கேற்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளனர் மேலும் அவர்களைத் தீவிரமாக எடுத்துக் கொள்ள வேண்டும் ........ 19

தரநிலை 4: குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதில் குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டு அவர்களும் ஈடுபட்டுள்ளார்கள் ........ 24

தரநிலை 5:நடுநிலை நேர்மை இலக்கு நிலைநிறுத்தப்படுகிறது மேலும் கொள்கை மற்றும் நடைமுறையில் பல்வகையானத் தேவைகள் மதிக்கப்படுகின்றன ........ 28

தரநிலை 6: குழந்தைகள் மற்றும் இளம்வயதினருடன் பணிபுரியும் நபர்கள் பொருத்தமானவர்கள் மேலும் குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு மதிப்புகளை நடைமுறையில் பிரதிபலிக்க ஆதரிக்கப்படுபவர்கள் ........ 33

தரநிலை 7: புகார்கள் மற்றும் கவலைகளுக்கானச் செயல்முறைகள் குழந்தைகளை மையமாகக் கொண்டவை ........ 38

தரநிலை 8: தற்போதைய கல்வி மற்றும் பயிற்சியின் மூலம் குழந்தைகள் மற்றும் இளம்வயதினரைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கான அறிவு, திறன்கள் மற்றும் விழிப்புணர்வுடன் பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் உள்ளனர். ........ 44

தரநிலை 9: இயல் மற்றும் நிகழ்நிலைச் சூழல்கள் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துகிறது, அதே நேரத்தில் குழந்தைகள் மற்றும் இளம்வயதினர் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்பைக் குறைக்கிறது ........ 48

தரநிலை 10: குழந்தைப் பாதுகாப்பு தரநிலைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்ந்து மதிப்பாய்வு செய்யப்பட்டு மேம்படுத்தப்படுகிறது ........ 53

தரநிலை 11: குழந்தைகள் மற்றும் இளம்வயதினருக்கு நிறுவனம் எவ்வாறு பாதுகாப்பானது என்பதைக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் ஆவணப்படுத்துகின்றன ........ 57

# பின்னணி

எல்லா குழந்தைகளுக்கும் பாதுகாப்பாக உணரவும் பாதுகாப்பாக இருக்கவும் உரிமை உண்டு, ஆனால் பாதுகாப்பு என்பது தானாக நடக்காது.

சமீபத்திய ஆண்டுகளில், விக்டோரியா நாடாளுமன்றத்தின் *நம்பிக்கை துரோக* விசாரணை [1] மற்றும் குழந்தைகள் பாலியல் துர்பிரயோகத்திற்கான நிறுவன பதில்களுக்கான அரசு ஆணையம்[2] (ராயல் கமிஷன்) உட்பட பல உயிர் பிழைத்தவர்களிடமிருந்தும் பல விசாரணைகளிலிருந்தும் கற்றுக்கொண்டதன் பலனை நாங்கள் கொண்டுள்ளோம். துர்பிரயோகத்தைத் தடுக்க நிறுவனங்களிடம் சரியான கலாசாரம், ஒழுங்குமுறைகள், செயல்முறைகள் மற்றும் புரிதல் இல்லாதபோது குழந்தைகளுக்கு ஏற்படும் பாழாக்குகிற தீங்குகளின் அளவை இவை காட்டுகின்றன.

குழந்தைகளுக்குப் பாதுகாப்பான ஒரு அமைப்பானது குழந்தைகளை உடல், பாலியல், உணர்ச்சி மற்றும் உளவியல் துர்பிரயோகம் மற்றும் புறக்கணிப்பு ஆகியவற்றிலிருந்து பாதுகாக்க நிதானமாகவும் கவனமாகவும் நடவடிக்கைகளை எடுக்கிறது. இது குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை முதன்மைப்படுத்துகிறது மற்றும் நிறுவனத்தின் ஒவ்வொரு அம்சத்திலும் குழந்தை பாதுகாப்பிற்கான அர்ப்பணிப்பை உட்பொதிக்கிறது.

விக்டோரியாவின் செய்து தீரவேண்டிய குழந்தை பாதுகாப்பு தரநிலைகள் (தரநிலைகள்) 2016 முதல் நடைமுறையில் உள்ளன.

அரசு ஆணையத்தைத் தொடர்ந்து, விக்டோரிய அரசாங்கம் தரநிலைகளை மதிப்பாய்வு செய்தது.[3] அந்த மதிப்பாய்வில், தரநிலைகளுக்கு வலுவான ஆதரவைக் கண்டறிந்தது மேலும் குழந்தைகள் பாதுகாப்பு அமைப்புகளுக்கான தேசியக் கோட்பாடுகளுடன் இத்தரநிலைகளைச் சிறப்பாகச் சீரமைக்கவும், தரநிலைகளின் நிர்வாகத்தை வலுப்படுத்தவும் பல மாற்றங்களைப் பரிந்துரைத்தது.

இந்தப் பரிந்துரைகளுக்கு இணங்க, இற்றைப்படுத்தப்பட்ட தரநிலைகள் 2021 இல் விக்டோரியா அரசாங்கத்தால் வெளியிடப்பட்டது. அவை ஜூலை 1, 2022 முதல் செயல்படுத்தப்பட 11 புதுப்பிக்கப்பட்ட தரநிலைகளைக் கொண்டிருக்கின்றன.

தரநிலைகளை நடைமுறைப்படுத்தும் பொழுது, நிறுவனங்கள் இன்றுவரை செய்த தங்கள் முயற்சிகளைப் பற்றிச் சிந்திக்கவும், குழந்தைகளைத் தீங்கு மற்றும் துர்பிரயோகம் ஆகியவற்றிலிருந்து விடுபட தங்கள் திறனை வளர்த்துக் கொள்ளவும் வாய்ப்பு உள்ளது.

---

1 குடும்பம் மற்றும் சமூக மேம்பாட்டுக் குழு, விக்டோரியா நாடாளுமன்றம், நம்பிக்கைத் துரோகம்: மதம் மற்றும் பிற அரசு சாரா நிறுவனங்களால் சிறுவர் துர்பிரயோகத்தைக் கையாள்வது பற்றிய விசாரணை, விக்டோரியா 2013, 2: ப 262.

2 ஆஸ்திரேலியாவின் காமன்வெல்த், குழந்தைகள் பாலியல் துர்பிரயோகத்திற்கான நிறுவன பதில்களுக்கான அரசு ஆணையம், 2017.

3 சுகாதாரம் மற்றும் மனித சேவைகள் துறை, விக்டோரியாவின் குழந்தை பாதுகாப்பு தரநிலைகளின் மதிப்பாய்வு, 2019.

# இந்த வழிகாட்டியை எவ்வாறு பயன்படுத்துவது

இந்த வழிகாட்டி ஒவ்வொரு தரநிலையையும் சுருக்கமாக கோடிட்டுக் காட்டுகிறது, எதிர்பார்க்கப்படும் முடிவுகள், குறைந்தபட்சத் தேவைகள் மற்றும் இணக்கக் குறிகாட்டிகள் ஆகியவற்றை அடையாளம் கண்டு நிறுவனங்கள் ஒவ்வொரு தரநிலைக்கும் இணங்க உதவுகிறது. நிறுவனங்கள் எவ்வாறு தரநிலைகளுக்கு இணங்கலாம் என்பது பற்றிய விரிவான வழிகாட்டுதல், குழந்தைகள் மற்றும் இளம்வயதினர்களுக்கான ஆணையத்தின் குழந்தைப் பாதுகாப்பு அமைப்பை உருவாக்குவதற்கான வழிகாட்டியில் சேர்க்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு தரநிலையையும் நிறுவனங்கள் அடைய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படும் **முடிவின்** அறிக்கையாக வெளிப்படுத்தப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, 'குழந்தைகள் மற்றும் இளம்வயதினர்கள் தங்கள் உரிமைகள், தங்களைப் பாதிக்கும் முடிவுகளில் பங்கேற்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளனர் மேலும் அவர்களைத் தீவிரமாக எடுத்துக் கொள்ள வேண்டும்' என்று தரநிலை 3 கூறுகிறது.

ஒவ்வொரு தரநிலையிலும் நிறுவனங்கள் பூர்த்தி செய்ய வேண்டிய **குறைந்தபட்ச தேவைகள்** உள்ளன. புதிய தரநிலைகள் நெகிழ்வுத்தன்மையை அனுமதிக்கும் அதே வேளையில், உத்தேசிக்கப்பட்ட முடிவை அடைய நிறுவனங்களுக்கு கூடுதல் வழிகாட்டுதலை வழங்குகின்றன.

ஒவ்வொரு தரநிலைக்கும், குழந்தைகள் மற்றும் இளம்வயதினர்களுக்கான ஆணையம் (கமிஷன்) ஆவணங்கள் மற்றும் செயல்களின் பட்டியலை வழங்கியுள்ளது, உங்கள் நிறுவனம் இந்தக் குறைந்தபட்ச தேவைகளைப் பூர்த்தி செய்கிறது என்பதை இது காட்டும். இவற்றை நாங்கள் **இணக்கக் குறிகாட்டிகள்** என்று அழைக்கிறோம். இணக்கத்தை மதிப்பிடும்போது, கட்டுப்பாட்டாளர்கள் எதைப் பார்க்கிறார்கள் என்பது பற்றிய கூடுதல் ஆலோசனைகளை நிறுவனங்கள் நாடுகின்றனர் என்ற  பின்னூட்டத்திற்குப் பதிலளிக்கும் வகையில் இணக்கக் குறிகாட்டிகள் உருவாக்கப்பட்டன. பொதுவாக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குறைந்தபட்ச தேவைகளை ஒத்து இணக்கக் குறிகாட்டிகள் இருக்கும், அவை குறிகாட்டிக்குப் பிறகு அடைப்புக்குறிக்குள் காட்டப்படும்.

பட்டியலிடப்பட்ட ஆவணங்களைத் தயாரித்து, ஒவ்வொரு அத்தியாயத்திலும் உள்ள **இணக்கக் குறிகாட்டிகளில்** குறிப்பிடப்பட்டுள்ள செயல்களை நிறைவு செய்தால், நிறுவனங்கள் பொதுவாக தரநிலைகளுக்கு இணங்கும். இருந்தாலும், ஒவ்வொரு தரநிலையிலும் குறிப்பிடப்பட்டுள்ளபடி, **முடிவையும் குறைந்தபட்ச தேவைகளையும்** எடுக்கப்பட்ட அணுகுமுறை எட்டுகிறதா என்பதை உங்கள் நிறுவனம் உறுதிசெய்ய வேண்டும்.

இந்த வழிகாட்டி பொதுவான ஒன்றாகும், ஏனெனில் தரநிலைகள் பரந்த மற்றும் மாறுபட்ட நிறுவனங்களுக்குப் பொருந்தும். உங்கள் நிறுவனத்தின் இயல்பு அல்லது பண்புகளுக்கு ஏற்ப இந்த வழிகாட்டியில்

முன்மொழியப்பட்டதை விட நீங்கள் வேறு ஏதாவது செய்ய வேண்டியிருக்கலாம். அப்படியானால், உங்கள் அணுகுமுறை எவ்வாறு **முடிவுகள்** மற்றும் தரநிலைகளின் **குறைந்தபட்ச தேவைகளுக்கு** இணங்குகிறது என்பதை நீங்கள் விளக்க வேண்டும்.

ஆணையம் உட்பட விக்டோரியாவில் தரநிலைகளுக்கென ஆறு இணை-கட்டுப்பாட்டாளர்கள் உள்ளனர், மேலும் ஆணையத்தின் இணையதளத்தில் உங்கள் கட்டுப்பாட்டாளரைக் கண்டறியலாம். குழந்தைகளுக்கான பல வகையான சேவைகளை வழங்கும் சில நிறுவனங்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட கட்டுப்பாட்டாளர்களைக் கொண்டிருக்கலாம். சில கட்டுப்பாட்டாளர்கள் அவர்கள் ஒழுங்குபடுத்தும் துறைகள் மற்றும் நிறுவனங்களுக்கென குறிப்பிட்ட வழிகாட்டுதலை வழங்கியுள்ளனர். உங்கள் துறைக்கு இணை-கட்டுப்பாட்டாளரின் வழிகாட்டுதல் பொருந்தி, அது இந்த வழிகாட்டியில் இருந்து வேறுபட்டால், உங்கள் நிறுவனம் அந்தத் துறையில் உங்கள் செயல்பாடுகளுக்கு இணை-கட்டுப்பாட்டாளரின் வழிகாட்டுதலைப் பின்பற்ற வேண்டும்.

தரநிலைகளை எவ்வாறு செயல்படுத்துவது மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிப்பது பற்றிய கூடுதல் தகவலுக்கு, குழந்தைகள் பாதுகாப்பு அமைப்பை உருவாக்குவதற்கான வழிகாட்டியைப் படிக்கவும்.

**சொற்களஞ்சியம்:** இந்த வழிகாட்டியில் உள்ள அபோரிஜினல் என்ற சொல் பழங்குடியினர் மற்றும் டோரஸ் ஸ்ட்ரெய்ட் தீவு மக்களை உள்ளடக்கியது. 18 வயதுக்குட்பட்ட குழந்தைகள் மற்றும் இளம்வயதினர்கள் இருவரையும் சேர்த்து குழந்தை அல்லது குழந்தைகள் என்ற சொல்லைப் பயன்படுத்துகிறோம். இந்த வழிகாட்டியில், ஒரு நிறுவனம் என்பது குழந்தைகளுடன் பணிபுரியும் அல்லது தன்னார்வத் தொண்டு செய்யும் வணிகம் அல்லது குழுவாகும்.

# தரநிலை 1: கலாசார ரீதியாக பாதுகாப்பான சூழலை நிறுவனங்கள் உருவாக்க வேண்டும், இதில் பழங்குடியின குழந்தைகள் மற்றும் இளம்வயதினர்களின் மாறுபட்ட மற்றும் தனித்துவமான அடையாளங்கள் மற்றும் அனுபவங்கள்மதிக்கப்படவும் ஆதரிக்கப்படவும் வேண்டும்.

**குழந்தைப் பாதுகாப்பு தரநிலை 1 க்கு இணங்க ஒரு நிறுவனம், குறைந்தபட்சம் பின்வருவனவற்றை உறுதி செய்ய வேண்டும்:**

1.1 ஒரு குழந்தை தனது கலாசாரத்தை வெளிப்படுத்தும் திறன் மற்றும் அவர்களின் கலாசார உரிமைகளை அனுபவிக்கும் திறன் ஊக்குவிக்கப்பட்டு தீவிரமாக ஆதரிக்கப்படுகிறது.

1.2 அனைத்து உறுப்பினர்களும் பழங்குடியினரின் கலாசாரத்தின் பலத்தை அங்கீகரிப்பதற்கும் பாராட்டுவதற்கும், பழங்குடியின குழந்தைகள் மற்றும் இளம்வயதினர்களின் நல்வாழ்வு மற்றும் பாதுகாப்பிற்கு அதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்வதற்கும் தேவையான உத்திகள் நிறுவனத்திற்குள் பதிக்கப்பெற்றுள்ளது

1.3 நிறுவனத்திற்குள் இனவெறி அடையாளம் காணப்படுவதையும், எதிர்கொள்ளப்படுவதையும், பொறுத்துக் கொள்ளப்படாமல் இருப்பதையும் உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் நிறுவனத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இனவெறியின் எந்த நிகழ்வும் பொருத்தமான விளைவுகளுடன் தீர்க்கப்படுகின்றன.

1.4 இந்த நிறுவனமானது பழங்குடியின குழந்தைகள், இளம்வயதினர் மற்றும் அவர்களது குடும்பத்தினர் அனைவரும் பங்கேற்பதற்கும், சேர்ப்பதற்கும் தீவிரமாக ஆதரவளித்து உதவுகிறது.

1.5 நிறுவனத்தின் கொள்கைகள், நடைமுறைகள், அமைப்புகள் மற்றும் செயல்முறைகள் அனைத்தும் ஒன்றாக இனைந்து கலாசார ரீதியாக பாதுகாப்பான மற்றும் உள்ளடக்கிய சூழலை உருவாக்கி, பழங்குடியின குழந்தைகள், இளம்வயதினர் மற்றும் அவர்களது குடும்பங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன.

## முக்கியமான கருத்துகள்

- உங்கள் நிறுவனத்தில் பங்கேற்கும் போது அனைத்து குழந்தைகளும் பாதுகாப்பாக உணருவதையும் பாதுகாப்பாக இருப்பதையும் நீங்கள்

உறுதிசெய்ய வேண்டும். இதில் பழங்குடியினக் [4]குழந்தைகளும் அடங்குவர்.

- பழங்குடியினக் குழந்தைகளுக்கான கலாசாரப் பாதுகாப்பு என்பது இவ்வாறாக வரையறுக்கப்படுகிறது 'அக்குழந்தைக்கு பாதுகாப்பான, ஊட்டமளிக்கும் மற்றும் நேர்மறையான சூழல் வழங்கப்பட்டு, அங்கே அவர்கள் தாங்களாகவே இருப்பதற்கும், அவர்களின் கலாசாரம், ஆன்மீகம் மற்றும் நம்பிக்கைகளை வெளிப்படுத்துவதற்கு, அவர்களது பராமரிப்பாளரால் ஆதரிக்கப்படுகிறார்கள்... (அப்பராமளிப்பாளர்) பழங்குடியினரை மதிப்பதால், அவர்களின் சுயம் மற்றும் அடையாளத்தை ஊக்குவிக்கிறார்'.[5]
- பண்பாட்டு பாதுகாப்பை அடைவது என்பது பழங்குடியின மக்களாலும் குறிப்பாக பழங்குடியின குழந்தைகளாலும் ஒரு நிறுவனம் எவ்வாறு பார்க்கப்படுகிறது மற்றும் அனுபவிக்கப்படுகிறது என்பதைப் புரிந்துகொள்வதை உள்ளடக்குகிறது.
- பழங்குடியின மக்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு தனித்துவமான வரலாறு மற்றும் அனுபவங்கள் உள்ளன, மேலும் ஆதிவாசிகளின் தனித்துவமான இடத்தை முதல் நாடுகளின் மக்களாக அங்கீகரிப்பது முக்கியமானது.
- பழங்குடியினராக அடையாளம் காண்பது என்பது குழந்தையின் அடையாளத்தின் ஒரு பகுதியாகும். எல்லோரையும் போலவே, பழங்குடியின மக்களும் வெவ்வேறு வாழ்க்கை அனுபவங்களையும் பண்புகளையும் கொண்டுள்ளனர். ஒவ்வொரு நபரும் அவரவர் தனித்தன்மைகள், பலம் மற்றும் சவால்களுடன் தனித்துவம் வாய்ந்தவர் என்பதை அங்கீகரிக்கும் வகையில் பழங்குடியினக் குழந்தைகளுக்கு ஆதரவான சூழல்களை நிறுவனங்கள் வழங்க வேண்டும்.
- கலாசாரமும் அடையாளமும் ஒன்றுடன் ஒன்று இணைந்தவை, பழங்குடியினக் குழந்தைகளை அவர்களின் அடையாளத்தில் வலுவாக உணர உதவுவதன் மூலம், அவர்களின் கலாசார உரிமைகளை அனுபவிக்க உதவுகிறீர்கள்.
- தங்களின் கலாசார அடையாளத்தை வெளிப்படுத்தும் திறன் பழங்குடியினக் குழந்தைகளை வலிமையாகவும் பாதுகாப்பாகவும் ஆக்குகிறது.[6] இது பல காரணங்களுக்காக முக்கியமானது. சிறுவர் துர்பிரயோகத்தைத் தடுக்கும் சூழலில், பழங்குடியினக் குழந்தைகள் தாங்களாகவே இருக்கவும், தங்கள் கலாசாரத்தை வெளிப்படுத்தவும் பாதுகாப்பாக உணராதபோது, மற்றவர்களால் துர்பிரயோகம்

---

[4] இந்த வழிகாட்டியில் உள்ள 'அபோரிஜினல்' என்ற சொல் பழங்குடியினர் மற்றும் டோரஸ் ஸ்ட்ரெய்ட் தீவு மக்களை உள்ளடக்கியது.

[5] SNAICC, [கலாசாரப் பாதுகாப்பு](), 2021.

[6] விக்டோரியா மாநிலம், குடும்பங்கள், நியாயம் மற்றும் வீட்டுவசதித் துறை, வுங்குரில்வில் கப்காப்டுயர் பழங்குடியினர் குழந்தைகள் மற்றும் குடும்பங்கள் ஒப்பந்தம், 2018, ப 35.

செய்யப்படும் அபாயம் அதிகரிக்கிறது மேலும் அவர்கள் துர்பிரயோகத்தைப் புகாரளிக்கத் தயாராகஇல்லாமலும் போகலாம்.[7]

- கலாசார உரிமைகள் என்பது ஒவ்வொரு குழந்தையும் தனித்தனியாகவோ அல்லது மக்கள் குழுவின் ஒரு பகுதியாகவோ, அவர்களின் பின்னணி, பழக்கவழக்கங்கள், சமூக நடத்தை, மொழி, மதம் அல்லது ஆன்மீகம், நம்பிக்கைகள் மற்றும் வாழ்க்கை முறை ஆகியவற்றை வளர்த்து வெளிப்படுத்தும் உரிமைகளாகும்.
- பழங்குடியின மக்கள் தங்கள் அடையாளத்தையும் கலாசாரத்தையும் அனுபவிப்பதற்கும்; அவர்களின் மொழியின் பயன்பாட்டை பராமரிக்கவும்; அவர்களின் உறவுகளைப் பேணவும்; பாரம்பரிய சட்டங்கள் மற்றும் பழக்கவழக்கங்களின் கீழ் அவர்களுடன் தொடர்பில் உள்ள நிலம், நீர் மற்றும் பிற வளங்களுடன் அவர்களின் உறவைப் பேணவும் தனித்துவமான கலாசார உரிமைகளைக் கொண்டுள்ளனர்.[8]
- உங்கள் நிறுவனத்தை அனைத்தும் உள்ளடக்கியதாக மாற்றுவது உங்கள் பொறுப்பு, அத்துடன் இதற்குக் கல்வி, உன்னிப்பான சிந்தனை மற்றும் நேர்மறையான நடவடிக்கை தேவை.
- பழங்குடியினரின் கலாசாரங்களைப் பற்றி கற்றுக்கொள்வது தொடர்ச்சியானப் பயணத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும். தலைவர்கள், ஊழியர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்கள், குழந்தைகள் மற்றும் நிறுவனச் சமூகத்தின் பிற உறுப்பினர்களிடையே விழிப்புணர்வையும் புரிதலையும் உருவாக்குவது முக்கியமாகும். நிறுவனத்தில் அவர்களின் பங்கு மற்றும் பொறுப்புகளைப் பொறுத்து அவர்களுக்குத் தேவைப்படும் பல்வேறு ஆதரவைப் பற்றிச் சிந்தியுங்கள்.
- ஒரு குழந்தையின் குடும்பத்தை வரவேற்று ஒரு நிறுவனத்தில் அவர்களைச் சேர்த்துக்கொள்வது அவர்களின் பாதுகாப்பிற்குப் பங்களிக்கிறது.[9] குடும்பம் என்பது பழங்குடியினரின் கலாசாரம், ஆன்மீகம் மற்றும் அடையாளத்தின் அடித்தளமாகும். குடும்பம் என்பது பிற கலாசாரங்களை விட பழங்குடியினரின் கலாசாரங்களில் மிகவும் பரந்த அளவில் வரையறுக்கப்படுகிறது.[10]
- இனவெறி குழந்தைகளுக்குத் தீங்கு விளைவிக்கும் மற்றும் அவர்களின் நல்வாழ்வையும் பாதுகாப்பையும் பாதிக்கிறது. இது குழந்தை

---

[7] P Anderson et al., *பழங்குடியினர் மற்றும் டோரஸ் ஸ்ட்ரெய்ட் தீவுவாசிகள் நிறுவன அமைப்புகளில் குழந்தைகள் மற்றும் குழந்தை பாலியல் துர்பிரயோகம்* , குழந்தைகள் பாலியல் துர்பிரயோகத்திற்கான நிறுவன பதில்களுக்கான அரசு ஆணையத்திற்கான அறிக்கை, [pdf 1MB], 2017, pp 30–33.

[8] மனித உரிமைகள் மற்றும் பொறுப்புகள் சட்டம் 2006 (Vic) இலிருந்து தழுவல்.

[9] விக்டோரியா மாநிலம், சுகாதாரம் மற்றும் மனித சேவைகள் துறை, பாலிட் முர்ரப்: பழங்குடியினரின் சமூக உணர்ச்சி நல்வாழ்வு கட்டமைப்பு 2017–2027, 2017.

[10] SNAICC, குடும்பத்துடனான இணைப்பு.

துர்பிரயோகத்தின் ஒரு வடிவமாக இருக்கலாம். உங்கள் நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளும்போது குழந்தைகளும் அவர்களது குடும்பத்தினரும் இனவெறியை அனுபவித்தால், அவர்கள் மற்ற கவலைகள் அல்லது புகார்களை எழுப்புவதில் நம்பிக்கையில்லாமல் இருக்கலாம். இனவெறி பற்றிய புகார்களை தீவிரமாக எடுத்து, அவற்றுக்கு முழுமையாகப் பதிலளிப்பது, உங்கள் நிறுவனத்தில் இனவெறி சகிக்கப்படாது என்பதைக் காட்டுகிறது.

- பழங்குடியினரின் கலாசாரத்தை ஆதரிக்கும் அல்லது ஒப்புக்கொள்ளும் பரந்த அறிக்கைகள் முக்கியமானவை, ஆனால் இவை மட்டும் குழந்தைகளுக்குப் பாதுகாப்பை உருவாக்காது. கலாசாரப் பாதுகாப்பை உருவாக்குவதற்கான உங்கள் நிறுவனத்தின் அணுகுமுறை நிறுவனம் முழுவதும் உட்பொதிக்கப்பட வேண்டும். இது பழங்குடியினக் குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்பங்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு பூர்த்தி செய்வதற்கான நிறுவனத்தின் அனைத்து கொள்கைகள், நடைமுறைகள், அமைப்புகள் மற்றும் செயல்முறைகள் ஆகும்.

## இணக்கக் குறிகாட்டிகள்

### இந்தத் தரநிலையை மதிப்பிடும்போது ஆணையம் எதைக் கவனிக்கும்?

பழங்குடியினக் குழந்தைகளுக்கான கலாசாரப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான புதிய கடமைப் பொறுப்புகளை இந்தத் தரநிலை நிறுவனங்களுக்கு வழங்குகிறது.

கலாசார ரீதியாகப் பாதுகாப்பானச் சூழலை நிறுவுவதற்கு நேரம், அர்ப்பணிப்பு மற்றும் அர்த்தமுள்ள ஈடுபாடு தேவை. நிறுவனங்கள் தரநிலை 1 உடன் இணங்குவதைத் தொடர, நீண்ட காலத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் அர்த்தமுள்ள நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இந்தப் புதிய தரநிலைக்கு இணங்குவதில் நிறுவனங்கள் வெவ்வேறு நிலைகளில் இருக்கும் என்பதை ஆணையம் புரிந்துகொள்கிறது. பழங்குடியினக் குழந்தைகளுக்குக் கலாசார ரீதியாக பாதுகாப்பானச் சூழலை ஏற்படுத்த இன்னும் குறிப்பிடத்தக்க முயற்சியை மேற்கொள்ளாத நிறுவனங்களுக்கு உதவ **அடித்தள நடவடிக்கைகள்** வழங்கப்படுகின்றன. இந்த **அடித்தள நடவடிக்கைகள்** நிறுவனங்கள் தரநிலைக்கு இறங்குவதற்கு அவர்கள் செய்ய வேண்டிய வேலையை அடையாளம் காணவும், செயல் திட்டத்தை உருவாக்கவும் உதவுகின்றன.

பழங்குடியினக் குழந்தைகளுக்கானக் கலாசார ரீதியாக பாதுகாப்பானச் சூழலை நிறுவுவதில் உங்கள் நிறுவனம் ஏற்கனவே நன்கு முன்னேறிவிட்டதாக உணர்ந்தால், **அடித்தள நடவடிக்கைகளில்** கவனம் செலுத்த வேண்டிய அவசியமில்லை. **மேலும் நடவடிக்கைகள்** வழங்கப்பட்டுள்ளன, இதன் மூலம் உங்கள் நிறுவனம் கலாசார ரீதியாக பாதுகாப்பான நிறுவனமாக மாறுவதற்கானப் பயணத்தைத் தொடர ஏற்கனவே செய்துள்ள பணிகளில் மேலும் வளர முடியும்.

முதலில் **அடித்தள நடவடிக்கைகளுக்கு** இணங்குவதை ஆணையம் பார்க்கும். கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் பொதுக் கடமைகளுக்குத் தேவையான மாற்றங்களை **அடித்தள நடவடிக்கைகள்** கோடிட்டுக் காட்டுகின்றன, ஆனால் நிறுவனங்களில் மாற்றம் ஏற்படுத்த நீண்ட காலம் எடுக்கலாம் என்பதை அங்கீகரிக்கிறது. தரநிலையுடன் முழு இணக்கத்தை அடைவதற்கான நிறுவனத்தின் பாதையை செயல்திட்டம் கோடிட்டுக் காட்ட வேண்டும். இந்தத் தரநிலையுடன் முழுமையாக இணங்குவது எப்படி இருக்கும் என்பதை நிறுவனங்கள் புரிந்துகொள்ள **மேலும் நடவடிக்கைகள்** உதவுகின்றன.[11]

## அடித்தள நடவடிக்கைகள்

### ஆவணங்கள்

- பழங்குடியினக் குழந்தைகளின் கலாசாரப் பாதுகாப்பிற்கான பொது அர்ப்பணிப்பு கிடைக்கிறது மற்றும் பொது அணுகலுக்காகக் காட்டப்படுகிறது. (1.1, 1.4, 1.5 மற்றும் 5.4க்கான இணைப்புகள்)
- குழந்தை பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக் கொள்கை உட்பட, குழந்தை பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு தொடர்பான கொள்கைகள் மற்றும் நடைமுறைகள், பழங்குடியினக் குழந்தைகளை மதித்து மரியாதை செய்யும் நிறுவனத்தின் உறுதிப்பாட்டை விவரிக்கிறது. இதில் பின்வருவன அடங்கும்:
  - ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் குழந்தைகள் தங்கள் கலாசாரத்தை வெளிப்படுத்துவதையும் அவர்களின் கலாசார உரிமைகளை அனுபவிப்பதையும் ஊக்குவிக்கவும் ஆதரவளிக்கவும் வேண்டும்
  - பழங்குடியின குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் நிறுவனத்தில் பங்கேற்பதற்கும், சேர்வதற்கும் பணியாளர்களும் தன்னார்வலர்களும் தீவிரமாக ஆதரவளிக்க வேண்டும்.
  - நிறுவனத்திற்குள் இனவெறி சகிக்கப்படாது மற்றும் சாத்தியமான விளைவுகள் உட்பட, நிறுவனம் எவ்வாறு பதிலளிக்கும்
  - [12]பழங்குடியினரின் கலாசாரத்தின் பலத்தை அங்கீகரித்து பாராட்டவும், பழங்குடியினக் குழந்தைகளின் நல்வாழ்வு மற்றும்

---

[11] உங்கள் நிறுவனத்தின் இயல்பு அல்லது பண்புகளுக்கு ஏற்ப இந்த வழிகாட்டியில் முன்மொழியப்பட்டதை விட நீங்கள் வேறு ஏதாவது செய்ய வேண்டியிருக்கலாம். அப்படியானால், உங்கள் அணுகுமுறை எவ்வாறு முடிவுகள் மற்றும் தரநிலைகளின் குறைந்தபட்ச தேவைகளுக்கு இணங்குகிறது என்பதை நீங்கள் விளக்க வேண்டும். சில துறைகள் மற்றும் நிறுவனங்கள் குறிப்பிட்ட வழிகாட்டுதலை வழங்கும் இணை-கட்டுப்பாட்டாளர்களைக் கொண்டுள்ளன. உங்கள் நிறுவனத்திற்கு இணை-கட்டுப்பாட்டாளரின் வழிகாட்டுதல் பொருந்தி, அது இந்த வழிகாட்டியில் இருந்து வேறுபட்டால், உங்கள் நிறுவனம் அந்தத் துறையில் உங்கள் செயல்பாடுகளுக்கு இணை-கட்டுப்பாட்டாளரின் வழிகாட்டுதலைப் பின்பற்ற வேண்டும்.

[12] குழந்தைகள் பாதுகாப்பு நிறுவனத்தை உருவாக்குவதற்கான வழிகாட்டியில் நிறுவனத்தின் சமூகத்தை யார் உருவாக்குகிறார்கள் என்பதற்கான வரையறையைப் பார்க்கவும்.

பாதுகாப்பிற்ல் அதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளவும் நிறுவனத்துடன் தொடர்புடைய அனைவருக்கும் உதவ வேண்டிய பொறுப்பு நிறுவனத்தின் தலைமைக்கு உள்ளது. (1.1, 1.2, 1.3, 1.4, 1.5)

- பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்களின் நடத்தை பற்றிய எதிர்பார்ப்புகளை நடத்தை விதித்தொகுப்பு மற்றும் பதவி விளக்கங்கள் கோடிட்டுக் காட்டுகின்றன, அதில் பின்வருவன அடங்கும்:
  - இனவெறியைச் சகித்துக்கொள்ளாமை மற்றும் ஊழியர்களும் தன்னார்வலர்களும் இனவெறிச் சம்பவங்களுக்கு எதிராகச் செயல்படுவார்கள் என்ற எதிர்பார்ப்பு
  - குழந்தைகள் தங்கள் கலாசாரத்தை வெளிப்படுத்தவும் அவர்களின் கலாச்சார உரிமைகளை அனுபவிக்கவும்ஆதரவு பெறுவார்கள். (1.1, 1.3)
- பழங்குடியினக் குழந்தைகளின் மாறுபட்ட மற்றும் தனித்துவமான அடையாளங்கள் மற்றும் அனுபவங்கள் மரியாதை செய்யப்பட்டு மதிக்கப்படும் ஒரு கலாசார ரீதியாகப் பாதுகாப்பானச் சூழலை நிறுவுவதற்கு ஜூலை 1, 2023 க்குள் நிறுவனம் எடுக்கும் நடவடிக்கைகளைச் செயல்திட்டம் கூறுகிறது. (1.1, 1.2, 1.3, 1.4, 1.5)

## அடித்தள நடவடிக்கைகள்

### செயல்கள்

- இனவெறி நிகழ்வுகள் தொடர்ந்து அடையாளம் காணப்பட்டு தீர்க்கப்படுகின்றன. (1.3)
- கீழ்கண்டவற்றிற்காக ஏற்கனவே எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை நிறுவனம் அடையாளம் காட்டுகிறது:
  - பழங்குடியினரின் கலாசாரத்தைப் புரிந்துகொள்ள, மரியாதை செய்ய, மதிக்க ஊழியர்கள், தன்னார்வலர்கள் மற்றும் தலைவர்களுக்கு ஆதரவு, வழிகாட்டுதல் அல்லது பயிற்சி தருதல் மற்றும் பழங்குடியினக் குழந்தைகளின் நல்வாழ்வு மற்றும் பாதுகாப்பில் இதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளுதல் (1.2 மற்றும் இணைப்புகள் 8.4)
  - பழங்குடியினக் குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்பங்கள் பங்கேற்பதற்கும் சேர்வதற்கும் ஆதரவளித்து, வசதிசெய்தல் (1.4)
  - பழங்குடியின மக்கள், அவர்களின் சாதனைகள், சமூகங்கள் மற்றும் கலாசாரங்களை அங்கீகரித்துக் கொண்டாடுதல் (1.2)
  - நிறுவனத்திற்குள் இனவெறி அடையாளம் காணப்படுவதையும் சரியான முறையில் நடவடிக்கை மேற்கொள்வதையும் உறுதி செய்தல் (1.3)

  - நிறுவனத்திற்குள் பழங்குடியினக் குழந்தைகளுக்கு கலாசார ரீதியாகப் பாதுகாப்பான சூழலை உருவாக்குதல். (1.5 மற்றும் 5.4க்கான இணைப்புகள்)

- ஏற்கனவே எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் இடைவெளிகள் இருந்தால் அவற்றை அடையாளம் கண்டு, தரநிலை 1ஐ முழுமையாகச் செயல்படுத்த நிறுவனம் எடுக்க வேண்டிய செயல்களை அடையாளம் காணவும். ஒரு செயல் திட்டம் என்பது நடவடிக்கை எடுப்பதற்குப் பொறுப்பான நபர் அல்லது குழு, கிடைக்கக்கூடிய ஆதாரங்கள் மற்றும் காலவரையறை ஆகியவற்றைக் கண்டறிய வேண்டும். (1.1, 1.2, 1.3, 1.4, 1.5)

## மேலும் நடவடிக்கைகள்

### ஆவணங்கள்

- குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக் கொள்கை உள்ளிட்ட கொள்கைகள் மற்றும் நடைமுறைகள், நிறுவனத்தின் எதிர்பார்ப்புகளை விவரிக்கின்றன மேலும் பழங்குடியினக் குழந்தைகளின் மாறுபட்ட மற்றும் தனித்துவமான அடையாளங்கள் மற்றும் அனுபவங்கள் மதிக்கப்படும் கலாசார ரீதியாக பாதுகாப்பானச் சூழலை உருவாக்க ஊழியர்கள், தன்னார்வலர்கள் மற்றும் தலைவர்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய விரிவான வழிகாட்டுதலையும் வழங்குகின்றன. (1.5)

### செயல்கள்

- பழங்குடியின மக்கள், சமூகங்கள், கலாசாரங்கள் மற்றும் மதிப்புகளை அங்கீகரிப்பதன் மூலம், பழங்குடியினக் குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு உள்ளடக்கிய மற்றும் வரவேற்கத்தக்க இயல் மற்றும் நிகழ்நிலைச் சூழலை நிறுவனம் உருவாக்குகிறது. (1.2)

- அனைத்து குழந்தைகளும் நிறுவனத்திடமிருந்து கலாசார உரிமைகள் பற்றிய தகவல்களைப் பெறுகிறார்கள் மற்றும் பழங்குடியினக் குழந்தைகள் தங்களது கலாசாரத்தை வெளிப்படுத்த நிறுவனம் ஊக்கமூட்டும் நடவடிக்கைகளை எடுக்கிறது. குழந்தைகள் தங்கள் கலாசாரத்தை வெளிப்படுத்தும்போது, நிறுவனத்தில் உள்ள ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் அவர்களுக்கு ஆதரவளிக்கிறார்கள். (1.1, 1.4 மற்றும் 3.1க்கான இணைப்புகள்)

- நிறுவனத்தில் உள்ள குழந்தைகளுக்கு உரிமையுணர்வை ஊட்டுவதற்கும், பழங்குடியினக் குழந்தைகளுக்கு கலாசார ரீதியாக பாதுகாப்பான வழியில் பங்கேற்கும் வாய்ப்புகளை வழங்குவதற்கும் இந்த நிறுவனம் நடவடிக்கை எடுக்கிறது. (1.4 மற்றும் 3.6க்கான இணைப்புகள்)

- இந்த நிறுவனம் பழங்குடியினக் குடும்பங்கள் நிறுவனத்தில் பங்கேற்பதற்காக கலாசார ரீதியாகப் பாதுகாப்பான வாய்ப்புகளை வழங்குகிறது. (1.4)
- நிறுவனத்தின் சமூக உறுப்பினர்களுக்கு இந்த நிறுவனம் பின்வருவனவற்றை வழங்குகிறது:
  - கலாசார உரிமைகள், பழங்குடியினரின் கலாசாரங்களின் பலம் மற்றும் பழங்குடியினக் குழந்தைகளின் நல்வாழ்வு மற்றும் பாதுகாப்பிற்கு கலாசாரத்தின் முக்கியத்துவம் பற்றிய தகவல்கள்
  - பழங்குடியினக் குழந்தைகளுக்கு, கலாசார பாதுகாப்பு மற்றும் குழந்தை துர்பிரயோகம் மற்றும் தீங்கு விளைவிப்பதைத் தடுப்பது ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்பு பற்றிய தகவல்
  - பழங்குடியினரின் கலாசாரங்கள் மற்றும் வரலாறுகளைப் பற்றி அறிந்துகொள்வதற்கும் பாராட்டுவதற்கும் வாய்ப்புகள். (1.1, 1.2)
- பழங்குடியினரின் கலாசாரங்களின் பலத்தை அங்கீகரிக்கவும் பாராட்டவும் நிறுவனத்தின் சமூகத்தை ஊக்குவிக்கும் உத்திகள் உருவாக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு, நிறுவனத்தில் பதித்துவைக்கப்படுகின்றன. (1.2)
- இனவெறியைத் தடுப்பதற்கான உத்திகள் அமுல்படுத்தப்படுகிறது மேலும் இனவாதச் சம்பவங்கள் சகித்துக் கொள்ளப்படுவதில்லை. (1.3)

# தரநிலை 2: குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு நிறுவனத்தின் தலைமை, நிர்வாகம் மற்றும் கலாசாரத்தில் பதித்துவைக்கப்பட்டுள்ளது

**குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 2 க்கு இணங்க ஒரு நிறுவனம், குறைந்தபட்சம் பின்வருவனவற்றை உறுதி செய்ய வேண்டும்:**

2.1 குழந்தைப் பாதுகாப்பிற்கு நிறுவனம் ஒரு பொது ஒப்புதலை வழங்குதல்.

2.2 நிறுவனத்தின் மேல் இருந்து கீழும், கீழ் இருந்து மேலும் அனைத்து நிலைகளிலும் குழந்தைப் பாதுகாப்புக் கலாசாரம் ஆதரிக்கப்பட்டு அத்துடன் முன்மாதிரியாக இருக்க வேண்டும்.

2.3 நிர்வாக ஏற்பாடுகள் அனைத்து மட்டங்களிலும் குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக் கொள்கையைச் செயல்படுத்த உதவுகிறது.

2.4 எதிர்பார்க்கப்படும் நடத்தைத் தரநிலைகள் மற்றும் பொறுப்புகள் குறித்த வழிகாட்டுதல்களை ஊழியர்களுக்கும் தன்னார்வலர்களுக்கும் நடத்தை விதித் தொகுப்பு வழங்குகிறது.

2.5 இடர் மேலாண்மை உத்திகள் குழந்தைகள் மற்றும் இளம்வயதினருக்கு ஏற்படும் அபாயங்களைத் தடுப்பது, அடையாளம் காண்பது மற்றும் குறைப்பது ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

2.6 பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் தகவல் பகிர்வு மற்றும் பதிவுகளைப் பராமரித்தலில் தங்கள் கடமைகளைப் புரிந்துகொள்கிறார்கள்.

## முக்கியமான கருத்துகள்

- குழந்தைப் பாதுகாப்பிற்கு உங்கள் நிறுவனம் பொது ஒப்புதலை அளிக்க வேண்டும். உங்கள் நிறுவனம் குழந்தைகளின் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்கிறது மற்றும் குழந்தை துர்பிரயோகம் அல்லது தீங்குகளைப் பொறுத்துக்கொள்ளாது என்பதை இது முழு சமூகத்திற்கும் சைகை காட்டுகிறது.
- குழந்தைப் பாதுகாப்பான கலாசாரம் என்பது குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்கு முன்னுரிமை அளிக்கும் பகிரப்பட்ட நடத்தைமுறைகள், விழுமியங்கள், கொள்கைகள் மற்றும் செயல்களை ஒரு நிறுவனம் கொண்டுள்ளது என்று அர்த்தம்.
- குழந்தைப் பாதுகாப்பான கலாசாரத்தைக் கொண்டிருப்பதற்கு, நிறுவனத்தில் உள்ள தலைவர்கள், ஊழியர்கள், தன்னார்வலர்கள், உறுப்பினர்கள் மற்றும் குழந்தைகளின் அன்றாட சிந்தனை மற்றும்

செயல்களில் குழந்தைப் பாதுகாப்பை உறுதிசெய்வது உங்கள் நிறுவனத்திற்கு அவசியமாகும்.

- உங்கள் நிறுவனத்தின் சமூகம் நிறுவனத்தின் விழுமியங்களை உள்வாங்கிக்கொள்வதற்குத் தலைவர்களை நோக்குகிறது. தலைவர்களின் நடத்தை ஒரு குழந்தைப் பாதுகாப்பான கலாசாரத்திற்கு முக்கியமாகும். குழந்தைப் பாதுகாப்பு நடைமுறைகளை தலைவர்கள் முன்னிறுத்த வேண்டும் மேலும் ஒரு உதாரணமாக இருந்து வழிநடத்த வேண்டும், ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் நடத்தைக்கு ஒரு முன்மாதிரியாக இருக்க வேண்டும் மேலும் குழந்தைகளுக்குத் தீங்கு விளைவிக்கும் நடத்தைகளைப் பொறுத்துக்கொள்ளக் கூடாது.
- குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக் கொள்கையானது, உங்கள் நிறுவனம் குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்கு எவ்வாறு முன்னுரிமை அளிக்கிறது என்பதையும், இதைச் செய்ய என்ன நடவடிக்கைகளை எடுக்கும் என்பதையும் கோடிட்டுக் காட்டுகிறது. ஊழியர்கள், தன்னார்வலர்கள் மற்றும் நிறுவனத்தின் சமூகத்திற்கான குழந்தைப் பாதுகாப்பு நடைமுறைகள் குறித்த நிறுவனத்தின் எதிர்பார்ப்புகளை இது அமைக்கிறது. குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக் கொள்கையை உருவாக்குதல் என்பதில் இதைப் பற்றி மேலும் படிக்கவும்.
- ஆட்சிமுறை என்பது ஒரு நிறுவனத்தின் தலைமை, கருதாப்பிழை மற்றும் பொறுப்புக்கூறல் செயல்முறைகளைக் குறிக்கிறது. ஆட்சிமுறையென்பது, முடிவுகளை எடுப்பதற்கு யாருக்கு அதிகாரம் உள்ளது, எப்படி முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் மற்றும் கண்காணிக்கப்பட வேண்டும் மற்றும் மக்கள் எவ்வாறு பதில் சொல்ல வேண்டும் என்பது பற்றிய ஒரு நிறுவனத்தின் விதிகளை உள்ளடக்கியது.[13]
- நிறுவனங்களில் ஆட்சிமுறை ஏற்பாடுகள் மாறுபடும் அதே வேளையில், குழந்தைப் பாதுகாப்பான கலாசாரத்தை வளர்ப்பதற்கு ஆதரவாக உங்கள் நிறுவனத்தின் குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக் கொள்கையை அடிமட்டத்தில் இருந்து மேல்மட்டம் வரை செயல்படுத்துவதை அது ஆதரிக்க வேண்டும். இதன் பொருள், நிறுவனத்தின் சமூகத்தின் உள்ளீட்டின் மூலம், குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு குறித்து, தலைவர்கள் நிறுவனத்திற்குத் தெளிவான வழிகாட்டுதலை அமைக்க வேண்டும். நிறுவனத்தின் ஆட்சிமுறை ஏற்பாடுகள் வெளிப்படைத்தன்மையை எளிதாக்குவதுடன், நிர்ணயிக்கப்பட்ட திசையை அடைவதற்கு தலைவர்களைப் பொறுப்பாக வைக்க வேண்டும்.

---

[13] ஆஸ்திரேலியாவின் ஆட்சிமுறை நிறுவனத்திலிருந்து, ஆட்சிமுறை என்றால் என்ன? என்பது தழுவப்பட்டது

- குழந்தைகளுடன் ஏற்றுக்கொள்ளக்கூடிய மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாத நடத்தைகளை நடத்தை விதிகள் பட்டியலிட வேண்டும். தொழில்முறை எல்லைகள், நெறிமுறை சார்ந்த நடத்தை, நடத்தையின் எதிர்பார்க்கப்படும் தரநிலைகள் மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாத உறவுகளை இது விவரிக்கிறது. நடத்தை விதிகளை உருவாக்குதல் என்பதில் இதைப் பற்றி மேலும் படிக்கவும்.

- குழந்தைகள் துர்பிரயோகம் மற்றும் தீங்கு விளைவிக்கும் அபாயங்களைக் கண்டறிதல், தடுத்தல் மற்றும் குறைத்தல் ஆகியவற்றில் நிறுவனத்தில் இருக்கும் இடர் மதிப்பீடு மற்றும் மேலாண்மை சரியாக கவனம் செலுத்துகிறதா என்பதைக் கண்காணிக்க மூத்த தலைவர்களுக்கு நிறுவனத்தில் உள்ள ஆட்சிமுறை ஏற்பாடுகள் ஆதரவளிக்க வேண்டும். ஆபத்தைக் கண்டறிதல் மற்றும் நிர்வகிப்பது பற்றிய கூடுதல் தகவல்களைக் குழந்தைப் பாதுகாப்பு நிறுவனத்தை உருவாக்குவதற்கான வழிகாட்டியில் தரநிலை 9 வழங்குகிறது.

- குழந்தைப் பாதுகாப்பை நிர்வகிப்பதற்கு தொடர்புடைய தகவல்களைப் பகிர்வது மிகவும் முக்கியமானது. உங்கள் நிறுவனத்தின் கலாசாரம், அமைப்புகள் மற்றும் செயல்முறைகள் அனைத்தும் குழந்தைகளுக்கு ஏற்படும் ஆபத்துகள் பற்றி அனைத்து மட்டங்களிலும் பயனுள்ள தகவல்ப் பகிர்வுக்கு ஆதரவளிக்க வேண்டும். ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் தங்கள் கடமைப் பொறுப்புகளில் தெளிவாக இருக்க வேண்டும்.

- வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் உங்கள் நிறுவனத்தின் ஒட்டுமொத்த நேர்மைக்கும் ஒரு நல்ல பதிவுப் பராமரித்தல் மையமாக உள்ளது. குழந்தை துர்பிரயோகம் அல்லது தீங்கு குறித்த ஒரு புகாருக்குத் திறம்பட பதிலளிப்பதற்கு துல்லியமான பதிவுகளை உருவாக்குவது, வைத்திருப்பது மற்றும் சேமிப்பது முக்கியம்.

- தகவல்களைப் பகிரும் போதும் பாதுகாப்பானப் பதிவுகளை வைத்திருக்கும் போதும் சம்பந்தப்பட்ட நபர்களின் இரகசியத்தன்மை மற்றும் தனியுரிமையை எப்போதும் கருத்தில் கொள்ள வேண்டும்.

# இணக்கக் குறிகாட்டிகள்

### இந்தத் தரநிலையை மதிப்பிடும்போது ஆணையம் எதைக் கவனிக்கும்?

பொதுவாக, இந்த ஆவணங்களைச் சமர்ப்பித்து, இந்தத் தரநிலையை அடைய ஆதரிக்கும் விதத்தில் நிறுவனங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டால், அவை இணக்கமாக இருக்கும்.[14]

## ஆவணங்கள்

- குழந்தைப் பாதுகாப்பிற்கான பொது அர்ப்பணிப்பு கிடைக்கிறது மற்றும் பொது அணுகலுக்காகக் காட்சிப்படுத்தப்படும். (2.1)
- குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக் கொள்கையானது, ஒவ்வொரு தரநிலைகள் தொடர்பாகவும் நிறுவனத்தின் எதிர்பார்ப்புகள் மற்றும் நடைமுறைகளை அமைக்கிறது. (2.3)
- குழந்தைகளுடன் பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்களின் நடத்தை மற்றும் குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல் பற்றிய எதிர்பார்ப்புகளை நடத்தை விதிகள் அமைக்கிறது. (2.4)

## செயல்கள்

- நிறுவனத்தில் உள்ள தலைவர்கள், ஊழியர்கள், தன்னார்வலர்கள், உறுப்பினர்கள் மற்றும் குழந்தைகள் குழந்தைப் பாதுகாப்பான கலாசாரத்தை முன்னெடுத்து முன்மாதிரியாகச் செயல்படுகின்றனர். குழந்தைகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு, குழந்தைகளின் பாதுகாப்பு குறித்து கவலைகள் இருந்தால் நடவடிக்கை எடுப்பதற்கு மற்றும் அன்றாட வாழ்வில் குழந்தைப் பாதுகாப்பிற்கு முன்னுரிமை கொடுப்பதற்கு அவர்கள் ஆதரவு தெரிவிக்கிறார்கள். (2.2)
- குழந்தை பாதுகாப்பு குறித்து தெளிவான எதிர்பார்ப்புகளை அமைத்து, குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக் கொள்கை ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்களால் செயல்படுத்தப்படுவதை தலைவர்கள் உறுதி செய்யவேண்டும். (2.3)
- பதிவு செய்யும் கலாசாரத்தைத் தலைவர்கள் ஊக்குவிக்க வேண்டும். (2.2, 2.3)

[14] உங்கள் நிறுவனத்தின் இயல்பு அல்லது பண்புகளுக்கு ஏற்ப இந்த வழிகாட்டியில் முன்மொழியப்பட்டதை விட நீங்கள் வேறு ஏதாவது செய்ய வேண்டியிருக்கலாம். அப்படியானால், உங்கள் அணுகுமுறை எவ்வாறு முடிவுகள் மற்றும் தரநிலைகளின் குறைந்தபட்ச தேவைகளுக்கு இணங்குகிறது என்பதை நீங்கள் விளக்க வேண்டும். சில துறைகள் மற்றும் நிறுவனங்கள் குறிப்பிட்ட வழிகாட்டுதலை வழங்கும் இணை-கட்டுப்பாட்டாளர்களைக் கொண்டுள்ளன. உங்கள் நிறுவனத்திற்கு இணை-கட்டுப்பாட்டாளரின் வழிகாட்டுதல் பொருந்தி, அது இந்த வழிகாட்டியில் இருந்து வேறுபட்டால், உங்கள் நிறுவனம் அந்தத் துறையில் உங்கள் செயல்பாடுகளுக்கு இணை-கட்டுப்பாட்டாளரின் வழிகாட்டுதலைப் பின்பற்ற வேண்டும்.

- ஆட்சிமுறை ஏற்பாடுகள் என்பது குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை வழங்குவதில் நிறுவனத்தின் செயல்திறனை மூத்தத் தலைவர்கள் தவறாமல் மதிப்பாய்வு செய்வதாகும். (2.3 மற்றும் 10.1க்கான இணைப்புகள்)
- ஆட்சிமுறை ஏற்பாடுகள் என்பது, நிறுவனத்தின் இடர் மதிப்பீடு மற்றும் மேலாண்மையானது சிறுவர் துர்பிரயோகம் மற்றும் தீங்கு விளைவிக்கும் அபாயங்களைக் கண்டறிதல், தடுத்தல் மற்றும் குறைப்பதில் சரியாக கவனம் செலுத்துகிறதா என்பதை மூத்த தலைவர்கள் மேற்பார்வையிடுவதாகும். (2.5 மற்றும் 9.1, 9.3க்கான இணைப்புகள்)
- பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் தங்களின் தகவல் பகிர்வு மற்றும் பதிவு வைத்திருக்கும் கடப்பாடுகளை புரிந்துகொள்ள வேண்டும். (2.6)
- நடத்தை விதிகள் அனைத்து ஊழியர்களுக்கும் தன்னார்வலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது மேலும் அவர்கள் அதைக் கடைபிடிக்கிறார்கள் என்பதை தலைவர்கள் உறுதி செய்யவேண்டும். (2.4)

# தரநிலை 3: குழந்தைகள் மற்றும் இளம்வயதினர்கள் தங்கள் உரிமைகள், தங்களைப் பாதிக்கும் முடிவுகளில் பங்கேற்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளனர் மேலும் அவர்களைத் தீவிரமாக எடுத்துக் கொள்ள வேண்டும்

**குழந்தைப் பாதுகாப்பு தரநிலை 3க்கு இணங்க ஒரு நிறுவனம், குறைந்தபட்சம் பின்வருவனவற்றை உறுதி செய்ய வேண்டும்:**

3.1 குழந்தைகள் மற்றும் இளம்வயதினருக்கு அவர்களது பாதுகாப்பு, தகவல் மற்றும் பங்கேற்பு உள்ளிட்ட அனைத்து உரிமைகள் குறித்தும் தெரிவிக்கப்பட வேண்டும்.

3.2 குழந்தைகள் மற்றும் இளம்வயதினர் பாதுகாப்பாக உணரவும், தனிமையுணர்வு தாக்காமலும் இருப்பதற்கு நட்பின் முக்கியத்துவம் அங்கீகரிக்கப்பட்டு, சகாக்களின் ஆதரவு ஊக்குவிக்கப்படுகிறது.

3.3 அமைப்பு அல்லது சூழலுக்குப் பொருத்தமான இடங்களில், குழந்தைகள் மற்றும் இளம்வயதினருக்கு பாலியல் துர்ப்பிரயோகம் தடுப்பு திட்டங்கள் மற்றும் தொடர்புடைய தகவல்களை வயதுக்கு ஏற்ற வகையில் வழங்கப்படுகிறது.

3.4 ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் தீங்கின் அறிகுறிகளைக் கண்டு, குழந்தைகள் மற்றும் இளம்வயதினர் தங்கள் கருத்துகளை வெளிப்படுத்தவும், முடிவெடுப்பதில் பங்கேற்கவும் மற்றும் அவர்களின் கவலைகளை எழுப்பவும் குழந்தைகளுக்கு ஏற்ற எளிதான வழிகளை வழங்க வேண்டும்.

3.5 பங்கேற்பை எளிதாக்கி, குழந்தைகள் மற்றும் இளம்வயதினரின் உள்ளீட்டிற்குப் பதிலளிக்கக்கூடிய ஒரு கலாசாரத்தை உருவாக்க நிறுவனங்களுக்கு உத்திகள் இருக்க வேண்டும்.

3.6 குழந்தைகள் மற்றும் இளம்வயதினர் பங்கேற்பதற்கான வாய்ப்புகளை நிறுவனங்கள் வழங்கி, அவர்களின் பங்களிப்புகளுக்குப் பதிலளித்து அதன் மூலம் நம்பிக்கை மற்றும் ஈடுபாட்டை வலுப்படுத்த வேண்டும்.

## முக்கியமான கருத்துகள்

- குழந்தைகளுக்கு அதிகாரம் அளித்து அவர்களுக்குச் செவிகொடுக்கும் நிறுவனத்தில் தங்களது கவலைகள் அல்லது புகார்களை எழுப்புவதற்கான வாய்ப்புகள் அதிகம்.
- குழந்தைகளின் கருத்துகளில் வடிவமைக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் குழந்தைகளுக்கு ஏற்படும் தீங்கைச் சிறப்பாகத் தடுக்கும்.

- அதிகாரமளித்தல் என்பது குழந்தைகளைத் தூண்டியெழுப்புவது மற்றும் அவர்கள் மீதும் ஒரு நிறுவனத்தின் மீதும் அவர்களின் நம்பிக்கையை வலுப்படுத்துவதாகும். இது தகவல் அறிந்து முடிவுகளை எடுப்பதற்கான திறமைகள் மற்றும் அறிவை குழந்தைகளுக்கு வழங்கி, தங்களின் வாழ்க்கையின் மீது கட்டுப்பாட்டை அதிகரிக்க அவர்களுக்கு உதவும்.[15]
- பெரியவர்களைப் போலவே எல்லா குழந்தைகளுக்கும் உரிமைகள் உண்டு. உரிமைகள் என்பது எந்த வேறுபாடுகளையும் பொருட்படுத்தாமல் ஒவ்வொரு நபருக்கும் சொந்தமான அடிப்படை உரிமைகள் ஆகும்.
- குழந்தைகளுக்கு அவர்களின் உரிமைகளைப் பற்றி அதிகாரமளிப்பது என்பது தலைவர்கள், ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் உட்பட ஒரு நிறுவனத்தில் உள்ள அனைத்து மக்களும் இவற்றைக் கடைபிடிப்பதைக் குறிக்கிறது:
  - எல்லா நேரங்களிலும் குழந்தைகளின் உரிமைகளை நிலைநிறுத்தவும் மதிக்கவும் வேண்டும்
  - தங்களின் உரிமைகளைப் பற்றி அவர்களுக்குக் கற்பிப்பதில் செயல்திறனுடன் செயல்பட வேண்டும்
  - தங்களின் உரிமைகளைப் பயன்படுத்த அவர்களுக்கு ஆதரவளிக்க வேண்டும்
- தங்களைப் பாதிக்கும் முடிவுகளில் பங்கேற்பதற்குக் குழந்தைகளுக்கு உரிமை உண்டு. பங்கேற்பு என்பது குழந்தைகளுக்கு அவர்களின் கருத்தைக் கூறவும் முடிவெடுப்பதைத் தெரிவிக்கவும் வாய்ப்புகளை வழங்குவதாகும். இதற்கு, குழந்தைகள் சொல்வதைக் கவனித்து, கேட்டு, தகுந்த மாற்றங்களை நிறுவனங்கள் செய்ய வேண்டும்.
- வலுவான நட்பால் குழந்தைகள் பயனடைவார்கள். அவர்கள் ஆதரவு, தகவல் மற்றும் ஆலோசனையின் முக்கிய ஆதாரமாகத் தங்கள் நண்பர்களைக் கண்டு, உதவிக்காக அவர்களிடம் செல்லலாம். குழந்தைகள் ஒன்றாகச் சந்திக்கவும், மகிழ்ச்சியான நேரத்தை அனுபவிக்கவும் அனுமதிக்க வேண்டும், மேலும் உங்கள் நிறுவனம் அவர்களின் சமூகத் தொடர்புகள் மற்றும் நட்புகளை ஆதரிக்க வேண்டும், மேலும் கொடுமைப்படுத்துதல் அல்லது தனிமைப்படுத்தும் நடத்தையை எதிர்க்க வேண்டும்.
- பாலியல் துர்பிரயோகத் தடுப்புத் திட்டங்கள் வயதுக்கு ஏற்ற திட்டங்கள் மற்றும் குழந்தைகளுக்கு வழங்கப்படும் கல்வியாகும். இந்தத் திட்டங்கள், பெரியவர்கள் அல்லது பிற குழந்தைகளின் தகாத நடத்தையைப் புரிந்துகொள்வதற்கும், தவறான சூழ்நிலைகளில்

[15] குழந்தைகள் மற்றும் இளம்வயதினருக்கான ஆணையம், அதிகாரமளித்தல் மற்றும் பங்கேற்பு: குழந்தைகள் மற்றும் இளம்வயதினருடன் பணிபுரியும் நிறுவனங்களுக்கான வழிகாட்டி, 2021.

இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கும், துர்பிரயோகம் அல்லது துர்பிரயோகம் செய்ய முயற்சி நடக்கும் போது உதவியை எவ்வாறு பெறுவது என்பதை அறிந்து கொள்வதற்கும் அவர்களின் அறிவையும் திறமையையும் வளர்க்கின்றன. குழந்தைகள் பாலியல் துர்பிரயோகம் பற்றி புரிந்துகொள்ளுதல் மற்றும் எவ்வாறு உதவி பெறுவது என்பதைப் பற்றிய திட்டங்கள் அல்லது பிற தகவல்களை உங்கள் நிறுவனம் வழங்குவது பொருத்தமானதா என்பதை நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.

- குழந்தைகளின் பாதுகாப்பு, அதிகாரமளித்தல் மற்றும் குழந்தைகளின் உரிமைகளை மதிப்பதில் உங்கள் நிறுவனத்தின் அனைத்து மட்டங்களில் உள்ளவர்களும் பங்கு வகிக்கின்றனர். குழந்தைகள் துர்பிரயோகம் மற்றும் தீங்கின் அறிகுறிகளுக்கு எவ்வாறு பதிலளிப்பது, குழந்தைகளின் பங்கேற்பை எவ்வாறு மேம்படுத்துவது மற்றும் ஊக்குவிப்பது என்பது குறித்து ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு இதைச் செய்ய ஆதரவு அல்லது பயிற்சி தேவைப்படலாம்.
- குழந்தைகளின் அனுபவங்களைப் பற்றியோ அல்லது அவர்கள் விரும்புவதைப் பற்றியோ எப்பொழுதும் கேட்கப்படுவதில்லை. பேசுவதற்கு வசதி செய்வதற்கும், அதற்கான வாய்ப்புகளை வழங்குவதற்கும் உங்கள் நிறுவனம் அவர்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும். பங்கேற்பு நடவடிக்கைகள் வயதுக்கு ஏற்றதாக, உள்ளடக்கியதாக மற்றும் அணுகக்கூடியதாகவும், தனிப்பட்ட தேவைகள் மற்றும் திறன்களுக்கு ஏற்றவாறும் இருக்க வேண்டும். இதை எப்படி செய்வது என்பது பற்றிய கூடுதல் தகவல்கள் அதிகாரமளித்தல் மற்றும் பங்கேற்றல்: குழந்தைகள் மற்றும் இளம்வயதினருடன் பணிபுரியும் நிறுவனங்களுக்கான வழிகாட்டி என்பதில் கிடைக்கும்.

## இணக்கக் குறிகாட்டிகள்

### இந்தத் தரநிலையை மதிப்பிடும்போது ஆணையம் எதைக் கவனிக்கும்?

பொதுவாக, இந்த ஆவணங்களைச் சமர்ப்பித்து, இந்தத் தரநிலையை அடைய ஆதரிக்கும் விதத்தில் நிறுவனங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டால், அவை இணக்கமாக இருக்கும்.[16]

[16] உங்கள் நிறுவனத்தின் இயல்பு அல்லது பண்புகளுக்கு ஏற்ப இந்த வழிகாட்டியில் முன்மொழியப்பட்டதை விட நீங்கள் வேறு ஏதாவது செய்ய வேண்டியிருக்கலாம். அப்படியானால், உங்கள் அணுகுமுறை எவ்வாறு முடிவுகள் மற்றும் தரநிலைகளின் குறைந்தபட்ச தேவைகளுக்கு இணங்குகிறது என்பதை நீங்கள் விளக்க வேண்டும். சில துறைகள் மற்றும் நிறுவனங்கள் குறிப்பிட்ட வழிகாட்டுதலை வழங்கும் இணை-கட்டுப்பாட்டாளர்களைக் கொண்டுள்ளன. உங்கள் நிறுவனத்திற்கு இணை-கட்டுப்பாட்டாளரின் வழிகாட்டுதல் பொருந்தி, அது இந்த வழிகாட்டியில் இருந்து வேறுபட்டால், உங்கள் நிறுவனம் அந்தத் துறையில் உங்கள் செயல்பாடுகளுக்கு இணை-கட்டுப்பாட்டாளரின் வழிகாட்டுதலைப் பின்பற்ற வேண்டும்.

### ஆவணங்கள்

- வயதுக்கு ஏற்ற மற்றும் எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய ஆவணங்கள், அச்சுப் பிரதியில் அல்லது நிகழ்நிலையில், எளிதாகக் கிடைக்கின்றன மேலும் குழந்தைகளுக்கு பின்வரும் விதத்தில் ஆதரவளிக்கின்றன:
  - பாதுகாப்பு, தகவல் மற்றும் பங்கேற்பு உட்பட அவர்களின் உரிமைகளைப் புரிந்து கொள்ளுதல்
  - நிறுவனத்தில் உள்ள பெரியவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை அறிதல்
  - நிறுவனத்தின் புகார்ச் செயல்முறையைப் புரிந்துகொள்ளுதல் மற்றும் தங்களது, தங்கள் நண்பர்களது அல்லது சகாக்களுக்களது பாதுகாப்புக் கவலைகளை எவ்வாறு எழுப்புவது என்பதைப் புரிந்துகொள்ளுதல்
  - குழந்தைகளை இலக்காகக் கொண்ட ஆதரவு சேவைகள் பற்றி அறிதல். (3.1)
- நிறுவனத்தின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்:
  - குழந்தைகளின் அதிகாரம் மற்றும் பங்கேற்பை ஊக்குவிக்க வேண்டும்
  - குழந்தைகளின் உரிமைகளுக்கான ஆதரவை உட்பொதிக்க வேண்டும். (3.1, 3.4, 3.5, 3.6)

### செயல்கள்

- நிறுவனத்தில் உள்ள ஊழியர்களும் தன்னார்வலர்களும் குழந்தைகளுடன் இணைந்து அவர்களுக்கு இவ்வாறு உதவ வேண்டும்:
  - பாதுகாப்பு, தகவல் மற்றும் பங்கேற்பு உட்பட அவர்களின் உரிமைகளைப் புரிந்து கொள்ளுதல்
  - நிறுவனத்தில் உள்ள பெரியவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை அறிதல்
  - நிறுவனத்தின் புகார்ச் செயல்முறையைப் புரிந்துகொள்ளுதல் மற்றும் தங்களது, தங்கள் நண்பர்களது அல்லது சகாக்களுக்களது பாதுகாப்புக் கவலைகளை எவ்வாறு எழுப்புவது என்பதைப் புரிந்துகொள்ளுதல்
  - குழந்தைகளை இலக்காகக் கொண்ட ஆதரவு சேவைகள் பற்றி அறிதல். (3.1, 3.4)
- நிறுவனத்தில் உள்ள குழந்தைகளை வலுவிழக்கச் செய்யும் நடைமுறைகள் கண்டறியப்பட்டு, அவற்றை மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். (3.5, 3.6)
- குழந்தைகள் துர்பிரயோகம் அல்லது தீங்கின் அறிகுறிகளைப் புரிந்துகொள்வதற்கும், அடையாளம் கண்டு செயல்படுவதற்கும்,

ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்குத் தகவல் வழங்கப்பட வேண்டும். (3.4)

- பொருத்தமான இடங்களில், பாலியல் துர்பிரயோகத் தடுப்புத் திட்டங்கள் மற்றும் பிற தொடர்புடைய தகவல்களைக் குழந்தைகளுக்கு வயதுக்கு ஏற்ற மற்றும் அணுகக்கூடிய வகையில் நிறுவனம் வழங்க வேண்டும். (3.3)
- குழந்தைகள் தங்கள் கருத்துகளை வெளிப்படுத்தவும், அவர்களை பாதிக்கும் முடிவுகளில் பங்கேற்கவும் நிறுவனம் வாய்ப்புகளை உருவாக்க வேண்டும். குழந்தைகளிடமிருந்து கேட்டதும் கற்றுக்கொள்வதும் நிறுவனம் எவ்வாறு செயல்படுகிறது என்பதைப் பாதிக்கும். (3.5, 3.6)
- குழந்தைகள் பங்கேற்பதற்கும், அவர்களின் கருத்துகளை வெளிப்படுத்துவதற்கும், அவர்களின் கவலைகளை எழுப்புவதற்கும் உதவி செய்யும் அறிவு மற்றும் திறன்களை வளர்த்துக்கொள்ள பணியாளர்களுக்கும் மற்றும் தன்னார்வலர்களுக்கும் ஆதரவு கிடைக்கவேண்டும் . (3.4)
- குழந்தைகள் தங்கள் சகாக்களுடன் சமூகத் தொடர்புகளையும் நட்பையும் வளர்த்துக் கொள்ளவும், தங்களது சகாக்களுக்கு ஆதரவளிக்கும் திறன்களை வளர்க்கவும் மேலும் குழந்தைகளிடையே கொடுமைப்படுத்துதல் அல்லது தனிமைப்படுத்துதல் போன்ற நடத்தைகளை எதிர்க்கவும் நிறுவனம் ஆதரவு தரவேண்டும். (3.2)

# தரநிலை 4: குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதில் குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டு அவர்களும் ஈடுபட்டுள்ளார்கள்

**குழந்தைப் பாதுகாப்பு தரநிலை 4 க்கு இணங்க ஒரு நிறுவனம், குறைந்தபட்சம் பின்வருவனவற்றை உறுதி செய்ய வேண்டும்**

4.1 தங்கள் குழந்தையைப் பாதிக்கும் முடிவுகளில் குடும்பங்கள் பங்கேற்கின்றன.

4.2 நிறுவனம் தனது குழந்தைப் பாதுகாப்பு அணுகுமுறை குறித்து குடும்பங்கள் மற்றும் சமூகத்துடன் வெளிப்படையாகத் தொடர்பு கொள்கிறது மேலும் தொடர்புடைய தகவல்கள் கிடைக்கின்றன.

4.3 நிறுவனத்தின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை மேம்படுத்துதல் மற்றும் மதிப்பாய்வு செய்வதில் குடும்பங்களும் சமூகங்களும் ஒருபங்கு வகிக்கின்றன.

4.4 நிறுவனத்தின் இயக்கங்கள் மற்றும் நிர்வாகத்தைப் பற்றி குடும்பங்கள், கவனிப்பாளர்கள் மற்றும் சமூகத்திற்கு தகவல் தெரிவிக்கப்படுகிறது.

## முக்கியமான கருத்துகள்

- இரத்தம், திருமணம், தத்தெடுப்பு, உறவின் கட்டமைப்புகள் அல்லது பிற நீட்டிக்கப்பட்ட குடும்ப கட்டமைப்புகள் உட்பட பலவிதமான உறவுகளால் குடும்பங்கள் உருவாக்கப்படலாம். அன்றாட வாழ்க்கைப் பணிகளில் பங்குகொள்ளும் நபர்கள் அல்லது மிக நெருக்கமான, தனிப்பட்ட உறவைப் பகிர்ந்துகொள்பவர்கள் போன்றவர்கள் குடும்பங்களில் இருக்கலாம்.
- சமூகங்கள் என்பது பொதுவான ஆர்வங்கள், அனுபவங்கள், சமூகப் பின்னணி, தேசியம், கலாசாரம், நம்பிக்கைகள் அல்லது அடையாளத்தைப் பகிர்ந்து கொள்ளும் நபர்களின் குழுவாகும்.[17] அவர்கள் நெருக்கமாக தொடர்பு கொள்ளும் அல்லது அடிக்கடி ஈடுபடும் சமூகங்களை நிறுவனங்கள், குடும்பங்கள் மற்றும் குழந்தைகள் கொண்டிருக்கலாம். குடும்பங்களைப் போலவே, சமூகங்களும் வேறுபட்டவை.

[17] கேம்பிரிட்ஜ் அகராதியின் வரையறையிலிருந்து தழுவியது.

- உங்கள் நிறுவனத்தில் பெற்றோர்கள், பராமரிப்பாளர்கள் மற்றும் குடும்பங்கள் வரவேற்கப்பட வேண்டும்.[18] பல்வேறு வகையான குடும்பங்களை மதிக்கும் ஒரு உள்ளடக்கிய கலாசாரத்தை உருவாக்குதல் மற்றும் பராமரித்தல் என்பது, குழந்தைகள் பாதுகாப்பாக உணரவும் பாதுகாப்பாக இருக்கவும் உதவுகிறது.
- உங்கள் நிறுவனத்தின் குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுப் பயணத்தில் குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்குப் பங்களிப்பது குழந்தைகளுக்குப் பயனளிக்கும். இதன் பொருள்:
  - நிறுவனங்களைக் குழந்தைப் பாதுகாப்பாக வைக்க உதவுவது மற்றும் குழந்தைகளை பாதுகாப்பாக வைக்க எப்படி உதவுவது என்பதை பெற்றோர்கள், பராமரிப்பாளர்கள் மற்றும் சமூகம் அறிந்து கொள்வார்கள்
  - தங்கள் குழந்தைகளை நன்கு அறிந்த குடும்பங்களின் நுண்ணறிவு மூலம் தனிப்பட்ட குழந்தைகளை நிறுவனங்கள் சிறப்பாக ஆதரிக்க முடியும்
  - பெற்றோர்கள், பராமரிப்பாளர்கள் மற்றும் சமூகம் அதிகாரம் பெற்றவர்களாக உணருவார்கள், மேலும் குழந்தையின் பாதுகாப்பு அல்லது நல்வாழ்வு குறித்து அவர்கள் அக்கறை கொண்டிருந்தால் என்ன செய்வது என்பதை அறிவார்கள்.
  - உங்கள் நிறுவனத்தின் குழந்தைப் பாதுகாப்பு அணுகுமுறை தொடர்ந்து மேம்படுத்தப்படும்.
- முடிவெடுப்பதில் குடும்பங்கள் பங்கேற்க வைப்பது என்பது ஒரு முடிவை எடுப்பதற்கு முன்பு அவர்களின் கருத்தைக் கேட்க வேண்டும் என்பதாகும், மேலும் இந்தக் கருத்து முடிவெடுக்கும் செயல்முறையின் ஒரு பகுதியாகக் கருதப்படும். தங்கள் குழந்தையின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வைப் பாதிக்கக்கூடிய முடிவுகளைப் பற்றிக் கூறுவதற்கு குடும்பங்களுக்கு உங்கள் நிறுவனம் வாய்ப்பளிக்க வேண்டும்.
- உங்கள் நிறுவனத்தின் செயல்பாடுகள் மற்றும் நிர்வாகத்தைப் பற்றி குடும்பங்கள், கவனிப்பாளர்கள் மற்றும் சமூகத்திற்கு தெரிவிக்கப்பட வேண்டும், அதன் மூலம் அவர்கள் அர்த்தமுள்ள வகையில் பங்கேற்க முடியும். உங்கள் நிறுவனம் என்ன செய்கிறது மற்றும் அது எவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதைக் குடும்பங்கள் புரிந்து கொள்ள வேண்டும். குழந்தைப் பாதுகாப்பு அல்லது நல்வாழ்வு குறித்த கவலை இருந்தால், எவ்வாறு நிறுவனத்தில் உள்ள சரியான நபர்களைத் தொடர்புகொள்வது என்பதை அவர்கள் அறிந்திருக்க வேண்டும்.

[18] சில நேரங்களில் சில குடும்ப உறுப்பினர்களுடன் பழகுவது பொருத்தமில்லாததாக இருக்கலாம், உதாரணமாக, குழந்தையுடனான அவர்களின் தொடர்புக்கு கட்டுப்பாடுகள் இருந்தால், அல்லது சில சூழ்நிலைகளில், அக்குழந்தையானது குழந்தைப் பாதுகாப்பில் இருந்தால். இது போன்ற நிகழ்வுகளில், பிற குடும்பத்தினர் மற்றும் சமூகத்தை ஈடுபடுத்த வேண்டும், அல்லது பொருத்தமானதாக இருந்தால், அவர்கள் யாரை ஈடுபடுத்த விரும்புகிறார்கள் என்று குழந்தையிடம் கேட்கலாம்.

## இணக்கக் குறிகாட்டிகள்

### இந்தத் தரநிலையை மதிப்பிடும்போது ஆணையம் எதைக் கவனிக்கும்?

பொதுவாக, இந்த ஆவணங்களைச் சமர்ப்பித்து, இந்தத் தரநிலையை அடைய ஆதரிக்கும் விதத்தில் நிறுவனங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டால், அவை இணக்கமாக இருக்கும்.[19]

#### ஆவணங்கள்

- நிறுவனத்தின் கொள்கைகள் குடும்பம் மற்றும் சமூக ஈடுபாட்டின் முக்கியத்துவத்தை பிரதிபலிக்கிறது மற்றும் இந்த ஈடுபாடு ஏற்படக்கூடிய வழிகளை விவரிக்கிறது. (4.3)
- புகார்களைக் கையாளும் கொள்கைகளில், குடும்பங்களுக்குத் தெரியப்படுத்துவதற்கான நடைமுறைகள் மற்றும் இரகசியத்தன்மை மற்றும் தனியுரிமை தொடர்பான கடப்பாடுகளுக்கு இணங்கும்போது இதை எப்படி செய்வது என்பது குறித்த வழிகாட்டுதலை வழங்குதல் ஆகியவை அடங்கும். (4.2 மற்றும் 7.2க்கான இணைப்புகள்)

#### செயல்கள்

- நிறுவனத்திற்குள் குழந்தை பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வில் தங்களது பங்கைப் பற்றி தகவல் தெரிவிப்பதன் மூலம் குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கும் பராமரிப்பதற்கும் குடும்பங்கள் மற்றும் சமூகங்கள் ஆக்கபூர்வமானப் பங்கை வகிக்க நிறுவனம் ஆதரிக்க வேண்டும். (4.4 மற்றும் ஒட்டுமொத்த விளைவு)
- நிறுவனமானது கீழ்கண்டவற்றைச் செய்வதன் மூலம் குடும்பங்கள் மற்றும் சமூகங்களுடன் திறந்தநிலையிலும் வெளிப்படையாகவும் இருக்கின்றது:
  - நிறுவனத்தின் குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் பற்றிய அணுகக்கூடிய தகவலை வழங்குதல் (4.2 மற்றும் 4.4)
  - நிறுவனத்தின் நிர்வாகம் மற்றும் செயல்பாடுகள், புகார்கள் எவ்வாறு கையாளப்படுகின்றன மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் மற்றும் குழந்தை பாதுகாப்பு அபாயங்களை நிறுவனம் எவ்வாறு நிர்வகிக்கிறது என்பது பற்றிய தகவல்களை வழங்குதல். (4.4)

---

[19] உங்கள் நிறுவனத்தின் இயல்பு அல்லது பண்புகளுக்கு ஏற்ப இந்த வழிகாட்டியில் முன்மொழியப்பட்டதை விட நீங்கள் வேறு ஏதாவது செய்ய வேண்டியிருக்கலாம். அப்படியானால், உங்கள் அணுகுமுறை எவ்வாறு முடிவுகள் மற்றும் தரநிலைகளின் குறைந்தபட்ச தேவைகளுக்கு இணங்குகிறது என்பதை நீங்கள் விளக்க வேண்டும். சில துறைகள் மற்றும் நிறுவனங்கள் குறிப்பிட்ட வழிகாட்டுதலை வழங்கும் இணை-கட்டுப்பாட்டாளர்களைக் கொண்டுள்ளன. உங்கள் நிறுவனத்திற்கு இணை-கட்டுப்பாட்டாளரின் வழிகாட்டுதல் பொருந்தி, அது இந்த வழிகாட்டியில் இருந்து வேறுபட்டால், உங்கள் நிறுவனம் அந்தத் துறையில் உங்கள் செயல்பாடுகளுக்கு இணை-கட்டுப்பாட்டாளரின் வழிகாட்டுதலைப் பின்பற்ற வேண்டும்.

- நிறுவனத்தால் எடுக்கப்பட்ட முடிவுகள் தங்கள் குழந்தையின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை பாதிக்கும் என்றால் அதில் பங்கேற்க குடும்பங்களுக்கு வாய்ப்பு வேண்டும். குடும்பங்களுடனானத் தகவல் தொடர்பு, முழுக் குடும்பத்தையும் பங்கேற்க உதவுகிறது. (4.1)
- குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்கான நிறுவனத்தின் அணுகுமுறை உட்பட, நிறுவனத்தின் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் பயிற்சிகள் பற்றிய பின்னூட்டத்தை வழங்க குடும்பங்களுக்கும் சமூக உறுப்பினர்களுக்கும் வாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும். (4.3)
- குடும்பங்கள் மற்றும் சமூகங்களின் பின்னூட்டங்களையும் ஈடுபாட்டையும் நிறுவனம் தீவிரமாக எடுத்துக் கொள்கிறது மேலும் அவர்களது கண்ணோட்டத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும். (4.3 மற்றும் 7.3க்கான இணைப்புகள்)

# தரநிலை 5:நடுநிலை நேர்மை இலக்கு நிலைநிறுத்தப்படுகிறது மேலும் கொள்கை மற்றும் நடைமுறையில் பல்வகையானத் தேவைகள் மதிக்கப்படுகின்றன

**குழந்தைப் பாதுகாப்பு தரநிலை 5 க்கு இணங்க ஒரு நிறுவனம், குறைந்தபட்சம் பின்வருவனவற்றை உறுதி செய்ய வேண்டும்:**

5.1 ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் உட்பட, நிறுவனமானது குழந்தைகள் மற்றும் இளம்வயதினரின் மாறுபட்ட சூழ்நிலைகளைப் புரிந்துகொண்டு, பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு ஆதரவும் பதிலும் வழங்க வேண்டும்.

5.2 கலாசார ரீதியாகப் பாதுகாப்பான, அணுகக்கூடிய மற்றும் புரிந்துகொள்ள எளிதான வழிகளில் தகவல், ஆதரவு மற்றும் புகார் செயல்முறைகளை குழந்தைகளும் இளைஞர்களும் அணுகலாம்.

5.3 இயலாமை கொண்ட குழந்தைகள் மற்றும் இளம்வயதினர், கலாசாரம் மற்றும் மொழியியல் ரீதியாக வேறுபட்ட பின்னணியில் உள்ள குழந்தைகள் மற்றும் இளைஞர்கள், வீட்டில் வாழ முடியாதவர்கள், மகளிர் ஓரினசேர்கையாளர், ஆடவர் ஓரினச்சேர்க்கையாளர், இருபாலினத்தவர், திருநங்கைகள் மற்றும் இடைப்பட்ட பாலினக் குழந்தைகள் மற்றும் இளம்வயதினரின் தேவைகளுக்கு நிறுவனம் கவனம் செலுத்த வேண்டும்.

5.4 பழங்குடியினக் குழந்தைகள் மற்றும் இளம்வயதினரின் தேவைகளுக்கு நிறுவனம் கவனம் செலுத்த வேண்டும் மற்றும் அவர்களுக்குக் கலாசார ரீதியாகப் பாதுகாப்பானச் சூழலை வழங்க/ஊக்குவிக்க வேண்டும்.

## முக்கியமான கருத்துகள்

- குழந்தைகளுக்குத் தனித்துவமான திறமைகள், பண்புகள், திறன்கள் மற்றும் வாழ்க்கை அனுபவங்கள் உள்ளன. பின்னணிகள், ஆளுமை மற்றும் நம்பிக்கைகளில் உள்ள வேறுபாடுகள் ஒரு குழந்தை உலகை எப்படி அனுபவிக்கிறது மற்றும் அவர்களுக்கு என்ன தேவை என்பதை வடிவமைக்கிறது.
- பன்முகத்தன்மை மதிக்கப்பட்டு மரியாதை செய்யப்படும் பொழுது நிறுவனங்கள் மற்றும் சமூகங்கள் வலுவாக இருக்கும், ஏனெனில் அப்பொழுது குழந்தைகள் தங்கள் திறனை நிறைவேற்றுவதற்கான வாய்ப்புகளை அணுக முடியும்.
- புறக்கணிப்பு மற்றும் பாகுபாடு போன்ற எதிர்மறை அனுபவங்கள் தீங்கு விளைவிக்கலாம், குழந்தைக்கு தீங்கு மற்றும் துர்பிரயோகம் ஏற்படும்

அபாயத்தை அதிகரிக்கலாம் மற்றும் குழந்தைக்கு ஒரு கவலை இருந்தால் அதைப் பற்றி பேசுவதற்கான வாய்ப்பைக் குறைக்கலாம்.

- சமவாய்ப்பு என்பது அவர்களின் பின்னணி, குணாதிசயங்கள் அல்லது நம்பிக்கைகளைப் பொருட்படுத்தாமல், எல்லாக் குழந்தைகளும் வாழ்வின் எல்லாப் பகுதிகளிலும் சுதந்திரமாகவும் சமமாகவும் பங்கேற்கக்கூடிய நியாயமான நிலையாகும். குழந்தைப் பாதுகாப்பான நிறுவனங்களில், குழந்தையின் பாதுகாப்பு என்பது அவர்களின் சமூகம் அல்லது பொருளாதார நிலை, அவர்களின் கலாசாரப் பின்னணி அல்லது அவர்களின் திறன்கள் உள்ளிட்ட சூழ்நிலைகளைப் பொறுத்தது அல்ல.
- குழந்தைப் பாதுகாப்பான நிறுவனம் பன்முகத்தன்மையை அங்கீகரிக்கிறது மற்றும் மதிக்கிறது மேலும் சில குழந்தைகள் மற்றவர்களை விட துர்பிரயோகத்திற்கு ஆளாகக்கூடியவர்கள் என்பதைப் புரிந்துகொள்கிறது. தங்கள் சகாக்களைப் போலவே தாங்களும் பாதுகாப்பாக இருப்பதற்குத் தேவையான உறவுகள், திறன்கள், அறிவு மற்றும் வளங்கள் குழந்தைகளுக்கு கிடைப்பதை உறுதிசெய்யும் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் இதில் இருக்க வேண்டும்.
- கிடைக்கக்கூடிய ஆதரவுகள் மற்றும் அணுகக்கூடிய புகார் செயல்முறைகள் பற்றிய தகவல்களை வழங்குவது, கலாச்சார ரீதியாக பாதுகாப்பான மற்றும் புரிந்துகொள்ள எளிதான தகவலை வழங்குவது என்பது, குழந்தைகளின் தனிப்பட்ட திறன்கள் மற்றும் வளர்ச்சியின் நிலை ஆகியவற்றின் அடிப்படையில் அவர்களின் தொடர்புத் தேவைகள் வேறுபடுகின்றன என்பதைப் புரிந்துகொள்வதில் உள்ளடங்குகிறது.
- ஒரு குழந்தையின் பின்னணி, குணாதிசயங்கள் அல்லது வாழ்க்கை அனுபவத்தின் காரணமாக உங்கள் நிறுவனத்தின் புகார் செயல்முறைக்கான அணுகல் கட்டுப்படுத்தப்படக்கூடாது. எல்லா குழந்தைகளும் புகார் அல்லது கவலையை எழுப்ப முடிவது முக்கியமானதாகும்.
- குழந்தைகளின் மாறுபட்ட சூழ்நிலைகளையும், நியாயமான முறையில் நடத்துவதற்கான அவர்களின் உரிமையையும் நிறுவனங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இவர்களின் தேவைகளுக்குக் கவனம் செலுத்துவதில் பின்வருவன அடங்கும்:
  - குறைபாடுள்ள குழந்தைகள் - குறைபாடுள்ள குழந்தைகளுக்கு ஒரு குழந்தைப் பாதுகாப்பு நிறுவனம் அதிகாரம் அளிக்க வேண்டும். குழந்தையின் திறன்களைப் பற்றி ஒரே மாதிரியான அல்லது அனுமானங்களைச் செய்யாது, மாறாக ஒவ்வொரு குழந்தையும் வெவ்வேறானது, இயலாமை மற்றும் உலகத்தை வேறுவிதமாக அனுபவிக்கிறது என்பதை அங்கீகரிக்க வேண்டும்.

– பண்பாடு மற்றும் மொழியியல் ரீதியாக வேறுபட்ட பின்னணியில் இருக்கும் குழந்தைகள் - ஒரு குழந்தைப் பாதுகாப்பான நிறுவனம் என்பது மொழி மற்றும் கலாசாரத் தேவைகளைப் புரிந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் மற்றும் பல்வேறு குடும்பக் கட்டமைப்புகள் மற்றும் விதிமுறைகளை கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.
– வீட்டில் வாழ முடியாதவர்கள் - குழந்தைகள் வீட்டில் வாழ முடியாததற்கு பல காரணங்கள் உள்ளன. உறவினர்கள் அல்லது நண்பர்களுடன் முறைப்படி அல்லது முறைசாரா முறையில் வாழ்வது (உறவினர் பராமரிப்பு), வளர்ப்பு பராமரிப்பு அல்லது குடியிருப்புப் பராமரிப்பு உட்பட அவர்களின் வாழ்க்கை ஏற்பாடுகள் வேறுபட்டிருக்கலாம். ஒரு குழந்தையின் வாழ்க்கை ஏற்பாடுகள் பற்றி நீங்கள் அறிந்திருக்காமல் இருக்கலாம், ஆனால் உங்கள் நிறுவனத்தை எல்லா குழந்தைகளும் அவர்களின் சூழ்நிலையைப் பொருட்படுத்தாமல் பாதுகாப்பாகவும் வரவேற்கும்படியும் செய்வது முக்கியமாகும்.
– மகளிர் ஓரினசேர்கையாளர், ஆடவர் ஓரினசேர்கையாளர், இருபாலினத்தவர், திருநங்கை, இடைப்பட்ட பாலினத்தவர், வினோதமானவர், வேறுபட்ட பாலினத்தவர் மற்றும் பாலினம் இல்லாத குழந்தைகள் மற்றும் இளம்வயதினர் - குழந்தைகள் மற்றும் இளம்வயதினர் தங்கள் பாலினம், பாலியல் சார்பு மற்றும் பால் வேறுபாட்டை வெவ்வேறு வழிகளில் அனுபவிக்கலாம் மற்றும் வெளிப்படுத்தலாம். LGBTIQ குழந்தைகள் மற்றும் இளம்வயதினர் பாதுகாப்பாக உணரவும் உங்கள் நிறுவனத்தில் பாதுகாப்பாக இருக்கவும், நீங்கள் அவர்களை வரவேற்று மதிப்பளிக்கிறீர்கள் என்பதை நீங்கள் தீவிரமாக நிரூபித்து, துர்பிரயோகம் மற்றும் தீங்குகளிலிருந்து அவர்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பீர்கள் என்பதை தெளிவுபடுத்த வேண்டும்.
– பழங்குடியினக் குழந்தைகள் - குழந்தைகள் தங்கள் கலாசாரம் மற்றும் சமூகத்துடன் இணைந்திருப்பதை அனுபவிக்கும் மற்றும் உணரும் உரிமை, இனவெறியிலிருந்து எழும் தீங்குகளிலிருந்து பாதுகாப்பாக இருத்தல் மற்றும் கலாசார ரீதியாக பாதுகாப்பான சேவைகள் மற்றும் நிறுவனங்களுக்கான அணுகலைப் பெறுவதை நிறுவனங்கள் நிலைநிறுத்த வேண்டும். குழந்தைப் பாதுகாப்பான நிறுவனத்தை உருவாக்குவதற்கான வழிகாட்டியில் பழங்குடியினக் குழந்தைகளுக்கு கலாசார ரீதியாக பாதுகாப்பானச் சூழலை உருவாக்குவது பற்றிய விரிவான தகவல்கள் உள்ளன.

## இணக்கக் குறிகாட்டிகள்

### இந்தத் தரநிலையை மதிப்பிடும்போது ஆணையம் எதைக் கவனிக்கும்?

பொதுவாக, இந்த ஆவணங்களைச் சமர்ப்பித்து, இந்தத் தரநிலையை அடைய ஆதரிக்கும் விதத்தில் நிறுவனங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டால், அவை இணக்கமாக இருக்கும்.[20]

#### ஆவணங்கள்

- புகார் செயல்முறைகள் மற்றும் ஆதரவுகள் பற்றிய தகவல்கள் உட்பட குழந்தைகளுக்கான அணுகக்கூடிய, வயதுக்கு ஏற்ற பொருட்கள் பல வகையான மொழிகளிலும் வடிவங்களிலும் கிடைக்கின்றன. பார்வையற்ற அல்லது பார்வைக் குறைபாடுள்ள குழந்தைகள் அல்லது படிக்க முடியாத குழந்தைகளுக்காக, எழுதப்பட்ட ஆவணங்கள் மட்டும் நம்பப்படுவதில்லை. (5.2)
- குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக் கொள்கை பின்வருவனவற்றை விவரிக்கிறது:
  - நேர்மை நெறி மற்றும் உள்ளடக்கத்திற்கான நிறுவனத்தின் ஒப்பிய பொறுப்பு (5.1)
  - அனைத்துக் குழந்தைகளின் பல்வேறு தேவைகளை நிறுவனம் எவ்வாறு அங்கீகரித்து மதிக்கிறது (5.1)
  - குழந்தைகள் அல்லது அவர்களது குடும்பங்களுக்கு அவர்களின் தனிப்பட்ட தேவைகளை அடையாளம் காண நிறுவனம் எவ்வாறு வழிகளை வழங்குகிறது (5.1)
  - கலாசார ரீதியாகப் பாதுகாப்பான, அணுகக்கூடிய மற்றும் புரிந்துகொள்ள எளிதான வழிகளில் தகவல், ஆதரவு மற்றும் புகார் செயல்முறைகளுக்கான அணுகலை எவ்வாறு நிறுவனம் குழந்தைகளுக்கு வழங்கும் (5.2)
  - அனைத்துக் குழந்தைகளும் பங்கேற்பதை ஆதரிப்பதற்கும் அனைத்துக் குழந்தைகளின் தேவைகளுக்கும் பதிலளிப்பதற்கும் நிறுவனம் எவ்வாறு நேர்மை நெறியை ஆதரிக்கும் மற்றும் நியாயமான மாற்றங்களைச் செய்யும் (5.1, 5.3, 5.4)
  - அனைத்துக் குழந்தைகளுக்கும் நேர்மை நெறியை எவ்வாறு நிறுவனம் நிலைநிறுத்துகிறது மற்றும் குறைபாடு, இனம்,

---

[20] உங்கள் நிறுவனத்தின் இயல்பு அல்லது பண்புகளுக்கு ஏற்ப இந்த வழிகாட்டியில் முன்மொழியப்பட்டதை விட நீங்கள் வேறு ஏதாவது செய்ய வேண்டியிருக்கலாம். அப்படியானால், உங்கள் அணுகுமுறை எவ்வாறு முடிவுகள் மற்றும் தரநிலைகளின் குறைந்தபட்ச தேவைகளுக்கு இணங்குகிறது என்பதை நீங்கள் விளக்க வேண்டும். சில துறைகள் மற்றும் நிறுவனங்கள் குறிப்பிட்ட வழிகாட்டுதலை வழங்கும் இணை-கட்டுப்பாட்டாளர்களைக் கொண்டுள்ளன. உங்கள் நிறுவனத்திற்கு இணை-கட்டுப்பாட்டாளரின் வழிகாட்டுதல் பொருந்தி, அது இந்த வழிகாட்டியில் இருந்து வேறுபட்டால், உங்கள் நிறுவனம் அந்தத் துறையில் உங்கள் செயல்பாடுகளுக்கு இணை-கட்டுப்பாட்டாளரின் வழிகாட்டுதலைப் பின்பற்ற வேண்டும்.

இனக்குழு, மதம், பாலினம், இடைப்பட்ட பாலினம், பாலின அடையாளம் அல்லது பாலியல் விருப்பம் ஆகியவற்றின் அடிப்படையில் ஏற்படும் பாகுபாட்டின் விளைவாக ஏற்படும் குழந்தை துர்பிரயோகம் மற்றும் தீங்குகளை எவ்வாறு தடுக்கிறது. (5.1, 5.3, 5.4)

## செயல்கள்

- அதனுடன் ஈடுபடும் அல்லது ஈடுபடக்கூடிய குழந்தைகளின் பல்வேறு சூழ்நிலைகள் மற்றும் தேவைகளைப் புரிந்து கொள்ள நிறுவனம் நடவடிக்கைஎடுக்கிறது. (5.1, 5.3)
- ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்கள்:
  - குழந்தைகளின் மாறுபட்ட சூழ்நிலைகள், குழந்தையின் பாதிப்பை அதிகரிக்கக்கூடிய காரணிகளை எவ்வாறு கண்டறிவது மற்றும் அனைத்து குழந்தைகளுக்கும் நேர்மைநெறி மற்றும் பாதுகாப்பை எவ்வாறு மேம்படுத்துவது என்பது பற்றிய தகவல்களும் வழிகாட்டுதலும் வழங்கப்படுகின்றன.
  - விசாரிப்பது மற்றும் பாதிப்பு அதிகரித்ததற்கான அறிகுறிகள் இருக்கும் இடங்களில் பதிலளிப்பது உட்பட, பாதிப்பை அனுபவிக்கும் குழந்தைகளுக்கு ஆதரவளிப்பதற்கும் அவர்களுக்குப் பதிலளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்
  - அனைத்து குழந்தைகளுக்கும்  நேர்மை நெறியை நிலைநாட்டவும், குழந்தைகளின் பாதுகாப்பை மேம்படுத்தவும், குழந்தை துர்பிரயோகம் மற்றும் தீங்குகளை தடுக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். (5.1, 5.3, 5.4)
- சமஉரிமை மற்றும் பன்முகத்தன்மைக்கான மரியாதையை அடைவதில் தெளிவான எதிர்பார்ப்புகளைத் தலைவர்கள் அமைக்கின்றனர். (5.1 மற்றும் 2.2க்கான இணைப்புகள்)
- அனைத்துக் குழந்தைகளும் பங்கேற்பதற்கான நியாயமான ஆதரவை நிறுவனம் உறுதி செய்கிறது. (5.1)

# தரநிலை 6: குழந்தைகள் மற்றும் இளம்வயதினருடன் பணிபுரியும் நபர்கள் பொருத்தமானவர்கள் மேலும் குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு மதிப்புகளை நடைமுறையில் பிரதிபலிக்க ஆதரிக்கப்படுபவர்கள்

**குழந்தைப் பாதுகாப்பு தரநிலை 6 க்கு இணங்க ஒரு நிறுவனம், குறைந்தபட்சம் பின்வருவனவற்றை உறுதி செய்ய வேண்டும்:**

6.1 குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை விளம்பரம், பரிந்துரை சரிபார்ப்புகள், பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்களின் முன் வேலைத் திரையிடல் உட்பட ஆட்சேர்ப்பு வலியுறுத்துகிறது.

6.2 தொடர்புடைய ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் நடப்பிலுள்ள குழந்தைகளுடன் பணிபுரிதல் சரிபார்ப்புகள் அல்லது அதற்கு சமமான பின்னணி சரிபார்ப்புகள் கொண்டுள்ளனர் .

6.3 அனைத்து ஊழியர்களும் தன்னார்வலர்களும் பொருத்தமான தொடக்கப் பயிற்சியை பெற வேண்டும் மேலும் பதிவு செய்தல், தகவல் பகிர்வு மற்றும் அறிக்கையிடல் கடப்பாடுகள் உட்பட குழந்தைகள் மற்றும் இளம்வயதினருக்கான தங்கள் பொறுப்புகளை அறிந்திருக்க வேண்டும்.

6.4 விடாது தொடர்கிற கண்காணிப்பு மற்றும் மக்கள் மேலாண்மை குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வில் கவனம் செலுத்துகிறது.

## முக்கியமான கருத்துகள்

- நல்ல ஆட்சேர்ப்பு நடைமுறைகள் மற்றும் வலுவான நுணுகி ஆராயும் செயல்முறைகள் குழந்தைகளுக்குத் தீங்கு ஏற்படுவதைத் தடுப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.
- ஒவ்வொரு ஊழியர் மற்றும் தன்னார்வலரின் பங்கு மற்றும் பொறுப்புகள் மேலும் குழந்தைகளுடன் அவர்களுக்கு இருக்கக்கூடிய தொடர்பு வகை குறித்து நிறுவனங்கள் தெளிவாக இருப்பதில் இருந்து ஆட்சேர்ப்புத் தொடங்குகிறது. விண்ணப்பதாரர்களுக்கு இருக்க வேண்டிய தகுதிகள், அனுபவம் மற்றும் பண்புக்கூறுகளை அடையாளம் காண நிறுவனங்களுக்கு இது உதவுகிறது.
- குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்கான நிறுவனத்தின் ஒப்பிய பொறுப்பை வேலை விளம்பரங்கள் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.
- குழந்தைகளுடன் பணிபுரிதல் சரிபார்ப்பானது, பதிவுகளின் சரிபார்ப்பின் பொழுது குழந்தைகளுக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடும் என்று சுட்டிக்காட்டப்படும் நபர்களைக் குழந்தைகளுடன் பணிபுரிய

அல்லது தன்னார்வலத் தொண்டு செய்வதைத் தடுக்கிறது. சிலர் சட்டப்படி சரியான சரிபார்ப்பை வைத்திருக்க வேண்டும். சட்டப்படி தேவை இல்லாவிட்டாலும், தங்கள் சரிபார்ப்பு செயல்முறையின் ஒரு பகுதியாக மக்கள் சரியான சரிபார்ப்பை வைத்திருக்க வேண்டும் என்று நிறுவனங்கள் தேர்வு செய்யலாம்.

- குழந்தைகளுடன் பணிபுரிதல் சரிபார்ப்பு என்பது உங்கள் நிறுவனத்தில் குழந்தைகளைப் பாதுகாப்பாக வைத்திருக்க ஒரு பயனுள்ள கருவியாகும். இருப்பினும், ஒரு குறிப்பிட்ட பாத்திரத்தில் குழந்தைகளுடன் பணியாற்றுவதற்கு அல்லது கவனித்துக்கொள்வதற்கு ஒரு நபரின் தகுதியை இது மதிப்பிடுவதில்லை. ஒரு விண்ணப்பதாரரின் தகுதியை மதிப்பிடுவதற்கு அவர்களது தகுதியை மதிப்பிட முயற்சிக்கவும்.
- பரிந்துரைகளைச் சரியாகச் சரிபார்க்கத் தவறினால் குழந்தைப் பாதுகாப்பில் சமரசம் செய்துகொள்ள வேண்டியிருக்கும். பரிந்துரைகளைச் சரிபார்ப்பதன் மூலம், விண்ணப்பதாரரின் தகவலை உறுதிப்படுத்தவும், நேர்காணலில் அவர்களின் பதில்களைப் பற்றி உங்களுக்கு ஏதேனும் கவலைகள் இருந்தால் அது குறித்து ஆராயவும் உங்களை அனுமதிக்கிறது.
- பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் தங்களின் பாத்திரங்கள் மற்றும் நிறுவனத்தை சரியான முறையில் உள்வாங்க வேண்டும், இதன்மூலம் குழந்தைகள் மீது அவர்களுக்கு உள்ள பொறுப்புகள் மற்றும் அவர்களுக்கு பாதுகாப்பான சூழலை எவ்வாறு உருவாக்குவது என்பதைப் புரிந்துகொள்ள முடியும். உங்கள் நிறுவனத்தின் குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக் கொள்கை மற்றும் நடத்தை விதிகளின் மேலோட்டப் பார்வையை வழங்குவது அதில் இருக்க வேண்டும்.
- உங்கள் நிறுவனத்தின் புகார்களைக் கையாளும் கொள்கை, புகாரளித்தல், பதிவு செய்தல் மற்றும் தகவல் பகிர்வுக் கடப்பாடுகள் பற்றிய தகவல்களும் ஆரம்பப் பயிற்சிகளில் இருக்க வேண்டும். குழந்தைப் பாதுகாப்பு அல்லது நல்வாழ்வு குறித்த கவலை இருந்தால் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிய தெளிவான தகவலை ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் பெற வேண்டும்.
- தெளிவான செயல்திறன் தரநிலைகள், மேலாளர்கள் மற்றும் தனிப்பட்ட ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு இடையே வழக்கமான சந்திப்புகள் மற்றும் சிக்கல்களை விவாதித்தால் மற்றும் கவலைகளைஎழுப்புதல் உட்பட பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்களின் மேற்பார்வை குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துகிறது. பின்னூட்டங்களை வழங்குவதற்கும், குழந்தைகளுக்குத் தீங்கு ஏற்படும் முன்பு ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் தொடர்பான ஆபத்தான அல்லது கவலைப்படும்

நடத்தையைக் கவனிக்கவும் கண்காணித்தல் மேலாளர்களுக்கு உதவுகிறது.

## இணக்கக் குறிகாட்டிகள்

### இந்தத் தரநிலையை மதிப்பிடும்போது ஆணையம் எதைக் கவனிக்கும்?

பொதுவாக, இந்த ஆவணங்களைச் சமர்ப்பித்து, இந்தத் தரநிலையை அடைய ஆதரிக்கும் விதத்தில் நிறுவனங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டால், அவை இணக்கமாக இருக்கும்.[21]

#### ஆவணங்கள்

- குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்கான நிறுவனத்தின் ஒப்பிய பொறுப்பை  வேலைவாய்ப்பு விளம்பரம் உள்ளடக்க வேண்டும். (6.1)
- குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு தொடர்பாக பாத்திரத்தின் தேவைகள், கடமைகள் மற்றும் பொறுப்புகள் பற்றிய தெளிவான எதிர்பார்ப்புகளை பதவி விவரிப்பு தரவேண்டும். (6.1)
- நிறுவன ஆட்சேர்ப்பு, மனித வளங்கள் மற்றும் தன்னார்வக் கொள்கைகள் பின்வருவனவற்றை விவரிக்கின்றன:
  - குழந்தைகளுடன் பணிபுரிய பொருத்தமான நபர்களை நியமிக்க நிறுவனத்திற்கு உதவும் ஆட்சேர்ப்பு நடைமுறைகள் (6.1)
  - நேர்காணல், பரிந்துரைத்தவர் சரிபார்ப்புகள், குழந்தைகளுடன் பணிபுரிதல் சரிபார்ப்பு மற்றும் பிற பதிவு அல்லது பின்னணி சரிபார்ப்பு உட்பட வேலைவாய்ப்புக்கு முந்தைய நுணுகி ஆராயும் நடைமுறைகள் (6.2)
  - நிறுவனத்தின் குழந்தைப் பாதுகாப்பு நடைமுறைகள் பற்றிய ஆரம்பப் பயிற்சிக்கானத் தேவைகள் (6.3)
  - குழந்தைகளுடன் பணிபுரிய ஒரு நபரின் தகுதியின் தற்போதைய மதிப்பீட்டை மேற்பார்வை மற்றும் மக்கள் மேலாண்மை நடைமுறைகள் எவ்வாறு ஆதரிக்கும். (6.4)
- ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கான ஆரம்பப் பயிற்சி ஆவணங்கள் பின்வருமாறு:
  - நடத்தை விதித் தொகுப்பு

---

[21] உங்கள் நிறுவனத்தின் இயல்பு அல்லது பண்புகளுக்கு ஏற்ப இந்த வழிகாட்டியில் முன்மொழியப்பட்டதை விட நீங்கள் வேறு ஏதாவது செய்ய வேண்டியிருக்கலாம். அப்படியானால், உங்கள் அணுகுமுறை எவ்வாறு முடிவுகள் மற்றும் தரநிலைகளின் குறைந்தபட்ச தேவைகளுக்கு இணங்குகிறது என்பதை நீங்கள் விளக்க வேண்டும். சில துறைகள் மற்றும் நிறுவனங்கள் குறிப்பிட்ட வழிகாட்டுதலை வழங்கும் இணை-கட்டுப்பாட்டாளர்களைக் கொண்டுள்ளன. உங்கள் நிறுவனத்திற்கு இணை-கட்டுப்பாட்டாளரின் வழிகாட்டுதல் பொருந்தி, அது இந்த வழிகாட்டியில் இருந்து வேறுபட்டால், உங்கள் நிறுவனம் அந்தத் துறையில் உங்கள் செயல்பாடுகளுக்கு இணை-கட்டுப்பாட்டாளரின் வழிகாட்டுதலைப் பின்பற்ற வேண்டும்.

  - குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக் கொள்கை
  - நிறுவனத்தின் குழந்தைப் பாதுகாப்பு நடைமுறைகள் மற்றும் புகார்கள் செயல்முறை பற்றிய தகவல், அத்துடன் அறிக்கையிடல், பதிவு செய்தல் மற்றும் தகவல் பகிர்வுக் கடப்பாடுகள். (6.3 மற்றும் 8.1க்கான இணைப்புகள்)

### செயல்கள்

- புதிய பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு முன் ஒவ்வொரு பாத்திரத்தின் குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு தேவைகள் மதிப்பீடு செய்யப்படுகின்றன. இவற்றில் பின்வருவன அடங்கும்:
  - தேவைப்படும் தகுதிகள், அனுபவம் மற்றும் பண்புக்கூறுகள்
  - குழந்தைகளுடனானக் கடமைகள் மற்றும் பொறுப்புகள்
  - சரிபார்ப்புகள், பயிற்சி மற்றும் மேற்பார்வைத் தேவைகள் உட்பட குழந்தை துர்பிரயோகம் அல்லது தீங்கு அபாயங்கள் ஏதேனும் இருந்தால் அவற்றை நிர்வகிக்கத் தேவையான நடவடிக்கைகள். (6.1)
- விண்ணப்பம், நேர்காணல் மற்றும் சரிபார்ப்பு செயல்முறை மூலம் எழுப்பப்படும் குழந்தைப் பாதுகாப்புக் கவலைகளை எப்படிக் கண்டறிந்து நிர்வகிப்பது என்பது உட்பட, ஆட்சேர்ப்புச் செயல்பாட்டில் குழந்தைப் பாதுகாப்பிற்கு எவ்வாறு முன்னுரிமை அளிப்பது என்பது குறித்த தகவல் மற்றும் வழிகாட்டுதல் பணியாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. (6.1)
- ஆட்சேர்ப்புச் செயல்முறைகளில் பின்வருவன அடங்கும்:
  - குழந்தைகளுடன் பணிபுரியும் தகுதியை நிலைநாட்ட ஒழுக்கக் கோட்பாடுகள் அடிப்படையிலான நேர்காணல் கேள்விகள்
  - பரிந்துரை செய்பவர் சரிபார்ப்புகள், குழந்தைகளுடன் பணிபுரிதல் சரிபார்ப்பு மற்றும் பிற பதிவு அல்லது பின்னணி சரிபார்ப்பு உள்ளிட்ட வேலைவாய்ப்புக்கு முந்தைய நுணுகி ஆராயும் நடைமுறைகள்
  - தேவையானத் தகுதிகள், பதிவுகள் மற்றும் குழந்தைகளுடன் பணிபுரிதல் சரிபார்ப்பு ஆகியவை செல்லுபடியாகும் மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட நிலையில் உள்ளது என்ற சரிபார்ப்பு
  - ஆட்சேர்ப்புச் செயல்முறையின் பதிவுகளை வைத்திருத்தல். (6.1)
- கண்காணிப்பு மற்றும் மக்கள் நிர்வாகத்தில் பணியாளர்கள் நடத்தை விதிகள் மற்றும் பிற குழந்தைப் பாதுகாப்புக் கொள்கைகளைப் பின்பற்றுகிறார்களா என்பதைச் சரிபார்க்கும் வழக்கமான மதிப்பாய்வுகள் அடங்கும். (6.4)
- ஊழியர்கள் அல்லது தன்னார்வலர்களின் நடத்தை குழந்தைப் பாதுகாப்பு குறித்த கவலைகளை எழுப்பும் பொழுது எடுக்க வேண்டிய

நடவடிக்கைகள் குறித்து அவர்களை நிர்வகிக்கும் மேலாளர்களுக்கு வழிகாட்டுதல் வழங்கப்படுகிறது. (6.4)

- தகுதிகள், குழந்தைகளுடன் பணிபுரிதல் சரிபார்ப்பு மற்றும் பிற பதிவு அல்லது நடந்துகொண்டிருக்கும் சரிபார்ப்புகள் மாற்றங்களுக்காகவும் அவை இன்னும் செல்லுபடியாகிறதா என்றும் தொடர்ந்து மதிப்பாய்வு செய்யப்பட்டு சரிபார்க்கப்படுகிறது. ஒரு நபரின் தகுதிகள், குழந்தைகளுடன் பணிபுரிதல் சரிபார்ப்பு அல்லது பிற பதிவு அல்லது தற்போதைய சரிபார்ப்பு செல்லுபடியாகாதபோது குழந்தைகளுக்கு ஏற்படும் அபாயங்களை நிர்வகிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. (6.2)
- குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு தொடர்பான ஒவ்வொரு பாத்திரத்தின் தேவைகள், கடமைகள், அபாயங்கள் மற்றும் பொறுப்புகள் ஆகியவற்றிற்கு ஏற்றவாறு ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஆரம்பப் பயிற்சியைப் பெறுகின்றனர். அறிக்கையிடல், பதிவு செய்தல் மற்றும் தகவல் பகிர்வுக் கடப்பாடுகள் உட்பட நிறுவனத்தின் குழந்தைப் பாதுகாப்பு நடைமுறைகள் மற்றும் புகார்கள் செயல்முறை ஆகியவை ஆரம்பப் பயிற்சியில் உள்ளடக்குகிறது. (6.3)

# தரநிலை 7: புகார்கள் மற்றும் கவலைகளுக்கானச் செயல்முறைகள் குழந்தைகளை மையமாகக் கொண்டவை

**குழந்தைப் பாதுகாப்பு தரநிலை 7 க்கு இணங்க ஒரு நிறுவனம், குறைந்தபட்சம் பின்வருவனவற்றை உறுதி செய்ய வேண்டும்:**

7.1 தலைமை, ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்களின் பாத்திரங்கள் மற்றும் பொறுப்புகள், பல்வேறு வகையான புகார்களைக் கையாள்வதற்கான அணுகுமுறைகள், தொடர்புடைய கொள்கைகள் அல்லது நடத்தை விதிகள் மற்றும் செயல்படுவதற்கும் அறிக்கை செய்வதற்கும் உள்ள கடமைகளை தெளிவாகக் கோடிட்டுக் காட்டும் அணுகக்கூடிய, குழந்தைகளை மையமாகக் கொண்ட புகார்க் கையாளுதல் கொள்கையை நிறுவனம் கொண்டுள்ளது.

7.2 புகார்களைக் கையாளும் பயனுள்ள செயல்முறைகள் குழந்தைகள், இளம்வயதினர், குடும்பங்கள், ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்களால் புரிந்து கொள்ளப்படுகின்றன, மேலும் அவை கலாச்சார ரீதியாகப் பாதுகாப்பானவை.

7.3 புகார்கள் தீவிரமாக எடுத்துக் கொள்ளப்பட்டு, உடனடியாகவும் முழுமையாகவும் பதிலளிக்கப்படுகின்றன.

7.4 சட்டத்தின்படி புகாரளிக்க வேண்டியிருந்தாலும் இல்லாவிட்டாலும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் புகார்கள் மற்றும் கவலைகளைப் புகாரளிப்பது மற்றும் சட்ட அமலாக்கத்துடன் ஒத்துழைக்கும் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை நிறுவனம் கொண்டுள்ளது.

7.5 அறிக்கையிடல், தனியுரிமை மற்றும் வேலைவாய்ப்பு சட்டக் கடப்பாடுகள் பூர்த்தி செய்யப்படுகின்றன.

## முக்கியமான கருத்துகள்

- குழந்தைகளை மையமாகக் கொண்ட புகார்களைக் கையாளும் செயல்முறைக்கு நிறுவனங்கள் நேர்மறையான புகார் கலாசாரத்தைக் கொண்டிருக்க வேண்டும். உங்கள் நிறுவனம் கவலைகளைப் புகாரளிப்பதை ஊக்குவிக்கிறது மற்றும் வரவேற்கிறது, புகார்களுக்கு உடனடியாக, முழுமையாக மற்றும் நியாயமாக பதிலளிக்கிறது மற்றும் ஆபத்தில் இருக்கும் குழந்தைகளைப் பாதுகாக்க உடனடி நடவடிக்கை எடுக்கிறது என்று அர்த்தமாகும்.
- உங்கள் நிறுவனத்தின் புகார்களைக் கையாளும் கொள்கையானது ஒரு குழந்தைப் பாதுகாப்புக் கவலை குறித்த புகாரை பெரியவர்கள் மற்றும் குழந்தைகள் இருவரும் எழுப்பக்கூடிய செயல்முறையைக் கோடிட்டுக்

காட்ட வேண்டும். புகார்ச் செயல்முறையானது பெரியவர்களுக்கும் குழந்தைகளுக்கும் வேறுபட்டதாக இருக்கலாம்.

- புகார்களைக் கையாளும் கொள்கையானது பெரியவர்கள் மற்றும் பிற குழந்தைகளால் குழந்தைகளுக்கு ஏற்படும் துஷ்பிரயோகம் மற்றும் தீங்குகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.
- புகாரைக் கையாளும் கொள்கையானது புகாரளிக்கப்பட வேண்டிய பல்வேறு வகையான புகார்கள் அல்லது நடத்தைகளைக் கோடிட்டுக் காட்டவேண்டும் மேலும் கட்டாய அறிக்கையிடல் கடப்பாடுகள் உட்பட, புகாரளிக்கப்பட வேண்டியவை பற்றிய தெளிவான வழிகாட்டுதலை வழங்க வேண்டும். யாருக்கு அறிக்கை செய்யலாம் என்பது தெளிவாக இருக்க வேண்டும்.
- உங்கள் நிறுவனத்தின் புகார்களைக் கையாளும் கொள்கை மற்றும் செயல்முறைகள் ஊழியர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்கள், குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு எளிதில் அணுகக்கூடியதாக இருக்க வேண்டும். குழந்தைகளுக்காக எழுதப்பட்ட மற்றும் அணுகக்கூடிய ஒரு தனியானக் கொள்கை அல்லது செயல்முறையை உருவாக்க நீங்கள் தேர்வு செய்யலாம். குழந்தைகளுக்குப் புகார் அல்லது கவலை இருந்தால் அவர்கள் என்ன செய்ய முடியும் என்பது பற்றிய தகவலைத் தெளிவாக வழங்கக்கூடிய ஒரு எளிய விளக்கப்படம் அல்லது சுவரொட்டியாக அது இருக்கலாம். குடும்பங்களுக்கான தனித் தகவலை உருவாக்கவும் நீங்கள் தேர்வு செய்யலாம்.
- புகார்கள் மற்றும் பாதுகாப்புக் கவலைகள் அல்லது துர்பிரயோகத்தை வெளிப்படுத்தும் குழந்தைகளை மென்மையாகவும் ஆதரவுடனும் நடத்த வேண்டும். இதை எப்படி செய்வது என்ற வழிகாட்டுதல் ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு இருக்க வேண்டும்.
- புகார் அல்லது பாதுகாப்புக் கவலை எழுப்பப்பட்டவுடன், குழந்தைகளின் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்க நடவடிக்கை எடுப்பது மட்டுமே நிறுவனத்தின் நோக்கமாக இருக்க வேண்டும். உடனடி அபாயங்களை மதிப்பிடுவது முக்கியம், இதன் மூலம் உங்கள் நிறுவனம் எடுக்கும் அடுத்த நடவடிக்கைகளுக்கு வழிகாட்டும்.
- உங்கள் புகாரைக் கையாளும் கொள்கையானது, உங்கள் நிறுவனத்திற்குள்ளும், வெளி அதிகாரிகளுக்கும் வெளிப்படுத்தல்கள், புகார்கள் மற்றும் பாதுகாப்புக் கவலைகளைப் புகாரளிப்பதற்கான செயல்முறையைச் செய்ய வேண்டும்.
- உங்கள் புகாரைக் கையாளும் கொள்கையானது, புகார்களின் விசாரணைகளை நடத்துவதற்கு உங்கள் நிறுவனத்திற்கு ஆதரவாக இருக்க வேண்டும் மற்றும் தற்போதைய இடர் மேலாண்மை, நியாயமான மற்றும் வெளிப்படையானச் செயல்முறைகள் மற்றும் விருப்ப

முரண்பாடுகளை எவ்வாறு நிர்வகிப்பது என்பது பற்றிய வழிகாட்டுதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

- குழந்தைகளின் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதற்கு, உங்கள் நிறுவனம் விக்டோரியா காவல்துறை, குழந்தைகள் பாதுகாப்பு, ஆணையம் மற்றும் புகார்கள் மற்றும் கவலைகளுக்குப் பதிலளிப்பதில் பங்கு வகிக்கும் பிற அதிகாரங்களுடன் ஒத்துழைக்க வேண்டும். அவர்கள் விசாரணை செய்ய வேண்டியிருக்கலாம் மற்றும் சாட்சிகளை அடையாளம் காணவும் தொடர்பு கொள்ளவும் மற்றும் ஆதாரங்களை சேகரிக்க அல்லது தக்கவைக்க உங்கள் நிறுவனத்தின் ஆதரவு மற்றும் உதவியிலிருந்து பயனடையக் கூடும்.
- புகார் அல்லது பாதுகாப்புக் கவலையைத் தீர்ப்பதில் ஒரு முக்கியப் பகுதி தெளிவான முடிவைக் கொண்டிருப்பதாகும். சிக்கலையும் ஆதாரத்தையும் சரியாகப் பரிசீலித்த பிறகு என்ன செய்வது என்பது குறித்து உங்கள் நிறுவனம் முடிவு எடுக்கிறது, இந்த முடிவைப் பற்றி சம்பந்தப்பட்ட நபர்களிடம் சொல்லி, அதன் பிறகு தகுந்த நடவடிக்கை எடுக்கிறது என்று இதற்கு அர்த்தமாகும்.
- புகார்ச் செயல்முறைகளுக்கு இரகசியத்தன்மை முக்கியமானது. புகார் செய்ய விரும்பும் போது இரகசியத்தன்மை மற்றும் தனியுரிமை பற்றிய கவலைகள் மக்களுக்கு இருக்கலாம். அவர்கள் அநாமதேயமாக இருக்க விரும்பலாம் அல்லது காவல்துறை போன்ற அதிகாரிகளுடன் தகவல்களைப் பகிர விரும்பாமல் இருக்கலாம். சில சமயங்களில் குழந்தைகளின் பாதுகாப்பிற்காகவோ அல்லது புகாருக்குரிய நபரை நியாயமாக நடத்துவதற்காகவோ இரகசியம் காக்க முடியாது. உங்கள் புகாரைக் கையாளுதல் கொள்கையானது, புகார் அளிக்கப்படும்போது இரகசியத்தன்மை எவ்வாறு நிர்வகிக்கப்பட வேண்டும் என்பதை விளக்க வேண்டும்.
- புகாருடன் தொடர்புடைய குழந்தை அல்லது மற்றொரு நபரை அடையாளம் காணும் தனிப்பட்ட தகவல், சம்பந்தப்பட்ட சட்டங்களின் கீழ் அனுமதிக்கப்படும் வழியில் மட்டுமே நிறுவனத்தால் வெளியிடப்பட வேண்டும்.
- உங்கள் நிறுவனத்தின் புகார்களைக் கையாளும் கொள்கை மற்றும் செயல்முறைகள் உங்கள் ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்குப் பொருந்தக்கூடிய வேலைவாய்ப்புச் சட்டக் கடமைகளுடன் ஒத்துப்போக வேண்டும். ஒரு பணியாளரின் நடத்தை தொடர்பான எந்தவொரு விசாரணையும் நியாமான நடைமுறையில் உள்ளது என்பதை நீங்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

## இணக்கக் குறிகாட்டிகள்

### இந்தத் தரநிலையை மதிப்பிடும்போது ஆணையம் எதைக் கவனிக்கும்?

பொதுவாக, இந்த ஆவணங்களைச் சமர்ப்பித்து, இந்தத் தரநிலையை அடைய ஆதரிக்கும் விதத்தில் நிறுவனங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டால், அவை இணக்கமாக இருக்கும்.[22]

#### ஆவணங்கள்

- புகார்க் கையாளுதல் கொள்கை புரிந்து கொள்ள எளிதானது, கலாசார ரீதியாகப் பாதுகாப்பானது, அணுகக்கூடியது மற்றும் குழந்தைகளை மையமாகக் கொண்டது. புகார்களைக் கையாளும் கொள்கையானது:
  - பெரியவர்கள் மற்றும் குழந்தைகள் எவ்வாறு புகார் செய்யலாம் மற்றும் நிறுவனம் எவ்வாறு புகார்களை விரைவாகவும் முழுமையாகவும் பதிலளிக்கும் மற்றும் விசாரணை செய்யும் என்பது பற்றிய தகவல்களை உள்ளடக்கியது (7.1, 7.2, 7.3)
  - குழந்தைகள், ஊழியர்கள், தன்னார்வலர்கள், குடும்பங்கள் மற்றும் சமூகங்களில் உள்ள அனைவரும் அணுகக்கூடிய புகார் செயல்முறையை உருவாக்குகிறது (7.1)
  - பெரியவர்கள் மற்றும் பிற குழந்தைகளால் குழந்தைகள் மீது குற்றம் சாட்டப்படும் துர்பிரயோகம் மற்றும் தீங்கை உள்ளடக்கியது (7.1, 7.4)
  - நிறுவனத்தின் நடத்தை விதிகளின் மீறல்களை உள்ளடக்கியது (7.1)
  - புகார் செய்பவர்களுக்கு என்ன ஆதரவும் உதவியும் வழங்கப்படும் என்று குறிப்பிடுகிறது (7.1)
  - புகார் எழுப்பப்பட்டு விசாரணை நடந்து கொண்டிருக்கும் போது குழந்தைகளுக்கு ஏற்படும் அபாயங்கள் எவ்வாறு நிர்வகிக்கப்படும் என்பதை கோடிட்டுக் காட்டுகிறது (தரநிலை 9க்கான இணைப்புகள்)
  - பதிவு வைத்திருக்கும் கடப்பாடுகளை உள்ளடக்கியது (7.2 மற்றும் 2.6க்கான இணைப்புகள்)
  - சந்திக்க வேண்டிய தனியுரிமை மற்றும் வேலைவாய்ப்புச் சட்டக் கடப்பாடுகளை ஆதரிக்கிறது. (7.5)
- ஊழியர்கள், தன்னார்வலர்கள், குழந்தைகள், குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்கான புகார்ச் செயல்முறையை அச்சில் அல்லது நிகழ்நிலையில் உள்ள ஆவணங்கள் விவரிக்கின்றன. (7.1, 7.2)

---

[22] உங்கள் நிறுவனத்தின் இயல்பு அல்லது பண்புகளுக்கு ஏற்ப இந்த வழிகாட்டியில் முன்மொழியப்பட்டதை விட நீங்கள் வேறு ஏதாவது செய்ய வேண்டியிருக்கலாம். அப்படியானால், உங்கள் அணுகுமுறை எவ்வாறு முடிவுகள் மற்றும் தரநிலைகளின் குறைந்தபட்ச தேவைகளுக்கு இணங்குகிறது என்பதை நீங்கள் விளக்க வேண்டும். சில துறைகள் மற்றும் நிறுவனங்கள் குறிப்பிட்ட வழிகாட்டுதலை வழங்கும் இணை-கட்டுப்பாட்டாளர்களைக் கொண்டுள்ளன. உங்கள் நிறுவனத்திற்கு இணை-கட்டுப்பாட்டாளரின் வழிகாட்டுதல் பொருந்தி, அது இந்த வழிகாட்டியில் இருந்து வேறுபட்டால், உங்கள் நிறுவனம் அந்தத் துறையில் உங்கள் செயல்பாடுகளுக்கு இணை-கட்டுப்பாட்டாளரின் வழிகாட்டுதலைப் பின்பற்ற வேண்டும்.

- விக்டோரியா காவல்துறை, குழந்தைப் பாதுகாப்பு மற்றும் குழந்தைகள் மற்றும் இளம்வயதினருக்கான ஆணையம் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு எப்போது புகார்கள் தெரிவிக்கப்பட வேண்டும் என்பது பற்றிய தகவல்களும் கொள்கைகளும் நடைமுறைகளும் அடங்கும். (7.5)
- புகார் எழுப்பப்படும் போது  நடவடிக்கை எடுப்பதற்கு ஒழுங்குக் கொள்கைகள் நிறுவனத்திற்கு உதவுகின்றன. (7.1)

## செயல்கள்

- ஒரு புகாரை நிறுவனத்துடன் தொடர்புடைய அனைவருக்கும் எவ்வாறு கிடைக்கச் செய்வது மற்றும் அணுகக்கூடிய வகையில் வைப்பது என்பதைப் பற்றிய தகவல்களை நிறுவனம் உருவாக்குகிறது. (7.2, 7.4)
- நிறுவனம் ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு ஆதரவையும் தகவல்களையும், நிறுவனத்திற்கு வெளியே உள்ள அதிகாரிகள் உட்பட, எங்கே மற்றும் எப்படி புகாரளிப்பது என்பது பற்றிய தகவல்களை வழங்குகிறது. (7.1, 7.3, 7.4)
- புகார்கள் தீவிரமாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன, அதாவது நிறுவனம் இவற்றைத் தொடர்ந்து செய்கிறது:
  - குழந்தைகளுக்கு ஏற்படும் அபாயங்களைக் கண்டறிந்து நிர்வகிக்கிறது
  - புகார்களுக்கு உடனடியாகவும் முழுமையாகவும் பதிலளிக்கிறது
  - குழந்தைகளின் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்கிறது மற்றும் தனியுரிமை மற்றும் வேலைவாய்ப்பு சட்டக் கடப்பாடுகளையும் சந்திக்கிறது
  - புகார் செயல்பாட்டில் ஈடுபட்டுள்ள அனைவரையும் ஆதரிக்கிறது
  - துர்பிரயோகம் அல்லது குழந்தைகளுக்கு நேர்ந்த தீங்கு குறித்த புகார்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு குறித்த கவலைகளை அதிகாரிகளிடம் புகார் செய்து சட்ட அமலாக்கத்துடன் ஒத்துழைக்கிறது. (7.1, 7.3, 7.4, 7.5 மற்றும் தரநிலை 9க்கான இணைப்புகள்)
- குழந்தைகளின் பாதுகாப்பு குறித்து எழுப்பப்படும் கவலைகள் மற்றும் குழந்தைகளின் துர்பிரயோகம் அல்லது தீங்கு பற்றிய வெளிப்பாடுகள் மற்றும் பதிலளிப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் உள்ளிட்ட நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்ட புகார்களின் பதிவுகள் வைக்கப்படுகின்றன. (7.3 மற்றும் 2.6க்கான இணைப்புகள்)
- புகார்களைக் கையாளும் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை வடிவமைத்து மதிப்பாய்வு செய்யும் போது குழந்தைகள், குடும்பங்கள் மற்றும் சமூகங்களிடம் ஆலோசிக்கப்படுகின்றன. (7.2 மற்றும் 4.3க்கான இணைப்புகள்)

- நிறுவனமானது முறையான இடைவெளியில் புகார்களைக் கையாளும் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை மதிப்பாய்வு செய்கிறது. (7.1 மற்றும் 10.1க்கான இணைப்புகள்)

# தரநிலை 8: தற்போதைய கல்வி மற்றும் பயிற்சியின் மூலம் குழந்தைகள் மற்றும் இளம்வயதினரைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கான அறிவு, திறன்கள் மற்றும் விழிப்புணர்வுடன் பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் உள்ளனர்.

**குழந்தைப் பாதுகாப்பு தரநிலை 8 க்கு இணங்க ஒரு நிறுவனம், குறைந்தபட்சம் பின்வருவனவற்றை உறுதி செய்ய வேண்டும்:**

8.1 நிறுவனத்தின் குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக் கொள்கையை திறம்பட செயல்படுத்த பணியாளர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு ஆதரவு அளிக்கப்படுகிறது.

8.2 பிற குழந்தைகள் மற்றும் இளம்வயதினரால் ஏற்படும் தீங்கு உட்பட குழந்தைகளுக்குத் தீங்கு விளைவிக்கும் குறிகாட்டிகளை அடையாளம் காணுவதற்கு ஊழியர்களும் தன்னார்வலர்களும் பயிற்சி மற்றும் தகவல் பெறுகின்றனர்.

8.3 குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு குறித்த சிக்கல்களுக்குத் திறம்பட பதிலளிக்க பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் பயிற்சியும் தகவலும் பெறுகிறார்கள், மேலும் அவற்றை வெளிப்படுத்தும் சக ஊழியர்களை ஆதரிக்கிறார்கள்.

8.4 குழந்தைகள் மற்றும் இளம்வயதினருக்குக் கலாசார ரீதியாக பாதுகாப்பானச் சூழலை எவ்வாறு உருவாக்குவது என்பது குறித்த பயிற்சி மற்றும் தகவல்களை பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் பெறுகின்றனர்.

## முக்கியமான கருத்துகள்

- ஒரு நிறுவனத்தின் ஊழியர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்கள் முறையான தகவல், பயிற்சி மற்றும் ஆதரவைப்பெற்றிருந்தால், அவர்கள் நிறுவனத்தின் குழந்தைப் பாதுகாப்பு மதிப்புகளை நிலைநிறுத்துவதற்கான வாய்ப்புகள் அதிகம் மற்றும் அவர்களின் மேலாளர் அல்லது குழந்தைப் பாதுகாப்பு நபரிடம் கவலைகளைப் புகாரளிக்க அதிக வாய்ப்புள்ளது.
- குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக் கொள்கை மட்டும் குழந்தைகளைத் துர்பிரயோகம் மற்றும் தீங்கிலிருந்து பாதுகாக்காது. நிறுவனங்கள் தங்கள் ஊழியர்களையும் தன்னார்வலர்களையும் குழந்தைகளைப் பாதுகாப்பாக வைத்திருக்க அறிவு மற்றும் திறன்களைக் கொண்டிருக்கச் செய்ய வேண்டும். இதன் பொருள் ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு விடாது தொடரும் கல்வி

மற்றும் பயிற்சியை வழங்கி, அவர்கள் தங்கள் பங்கைச் செய்யும்போது அதைப் பயன்படுத்தச் செய்யலாம்.

- துர்பிரயோகம் அல்லது தீங்கிற்கு ஆளாகும் ஒரு குழந்தையின் அறிகுறிகளை அடையாளம் காண ஒரு குழந்தைப் பாதுகாப்பு அமைப்பு அதன் ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்களை ஆதரிக்கிறது. சில சமயங்களில் அக்குழந்தை யாரிடமாவது தனக்குத் தீங்கு நேரிடுவதைப் பற்றி சொல்லலாம், ஆனால் மற்ற நேரங்களில் ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் நடத்தை, உணர்ச்சிகள் அல்லது உடல் தோற்றத்தில் ஏற்படும் மாற்றங்களைக் கவனிக்க வேண்டும்.
- ஒரு குழந்தைப் பாதுகாப்பு அமைப்பு அதன் ஊழியர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்களுக்கு பயிற்சி மற்றும் தகவல்களை வழங்குகிறது, இதன் மூலம் குழந்தைகளை ஆதரிப்பது மற்றும் அவர்கள் வெளியிடும் எவற்றிற்கும் பதிலளிப்பது உட்பட குழந்தை நலம் மற்றும் பாதுகாப்புச் சிக்கல்களுக்கு அவர்களால் திறம்பட பதிலளிக்க முடியும்.
- ஒரு குழந்தைக்கு ஏற்படும் தீங்கைப் பற்றிய தகவல்களைப் பெறுவது துன்பமாகவும் மன அழுத்தமாகவும் இருக்கலாம். ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் யாரிடம் இருந்து வழிகாட்டுதல் மற்றும் ஆதரவைப் பெறலாம் மற்றும் தங்கள் சக ஊழியர்களை எப்படி ஆதரிப்பது என்பதை அறிந்து கொள்வது பயனுள்ளதாக இருக்கும்.
- பழங்குடியின மக்கள் மற்றும் கலாசாரம் மற்றும் மொழியியல் ரீதியாக வேறுபட்ட பின்னணியில் உள்ளவர்கள் தங்கள் கலாசாரம் மற்றும் அடையாளம் மதிக்கப்படுவதாகவும், இனவெறி பொறுத்துக்கொள்ளப்படாது என்றும், தாங்களாகவே இருப்பதைப் பாதுகாப்பாக உணரும் வகையில் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுப்பதில் பணியாளர்களுக்கும் தன்னார்வலர்களுக்கும் வழிகாட்டுதல் தேவை.
- குறிப்பாக சிறுவர் துர்பிரயோகத்தில் இருந்து தப்பிப்பிழைப்பவர்களுக்கு, தீங்கின் குறிகாட்டிகள் உட்பட, குழந்தைப் பாதுகாப்பு பிரச்சினைகள் குறித்த ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கான பயிற்சி சங்கடமாக இருக்கலாம். சம்பவத்தைப் பற்றி தகவல் அறிந்த அணுகுமுறை என்பது அந்த சம்பவத்தின் விளைவுகள், தொடர்புடைய நபரின் மீது ஏற்படுத்திய மனஅழுத்தம், வழங்கப்பட தகவலின் தன்மை மற்றும் வழங்கப்பட விதம் ஆகியவற்றைப் புரிந்துகொள்வதை உள்ளடக்குகிறது. இது தனிநபர்களை மேலும் தீங்கு ஏற்படுவதில் இருந்து பாதுகாக்கக் கோருகிறது.

## இணக்கக் குறிகாட்டிகள்

### இந்தத் தரநிலையை மதிப்பிடும்போது ஆணையம் எதைக் கவனிக்கும்?

பொதுவாக, இந்த ஆவணங்களைச் சமர்ப்பித்து, இந்தத் தரநிலையை அடைய ஆதரிக்கும் விதத்தில் நிறுவனங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டால், அவை இணக்கமாக இருக்கும்.[23]

### ஆவணங்கள்

- பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கான பயிற்சி செயல் திட்டத்தில் இவற்றிற்கானப் பயிற்சியும் அடங்கும்:
  - குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக் கொள்கை (8.1)
  - சிறுவர் துர்பிரயோகம் மற்றும் தீங்கின் குறிகாட்டிகளைக் கண்டறிதல் (8.2)
  - ஒரு குழந்தைக்கு ஏற்படும் தீங்கைப் பற்றி வெளிப்படுத்தும் ஒரு நபரை எவ்வாறு ஆதரிப்பது (8.3)
  - உள் மற்றும் வெளிப்புற அறிக்கையிடல் தேவைகள், குடும்பங்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கு அறிவித்தல் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் அபாயங்களை நிர்வகித்தல் உள்ளிட்ட குழந்தைப் பாதுகாப்புப் பிரச்சினைகளுக்கு எவ்வாறு பதிலளிப்பது (8.3)
  - கலாசாரப் பாதுகாப்பை எவ்வாறு ஆதரிப்பது. (8.4)
- ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கான வழிகாட்டுதல் பொருட்கள் (கொள்கைகள், நடைமுறைகள், வழிகாட்டுதல்கள், தகவல் தாள்கள் மற்றும் சுவரொட்டிகள் போன்றவை) பின்வருவனவற்றைப் பற்றிய வழிகாட்டுதலை வழங்குகின்றன:
  - குழந்தை துர்பிரயோகம் மற்றும் தீங்கின் குறிகாட்டிகளைக் கண்டறிதல், மற்ற குழந்தைகளால் ஏற்படுபவை உட்பட (8.2)
  - உள் மற்றும் வெளிப்புற அறிக்கையிடல் தேவைகள், குடும்பங்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கு அறிவித்தல் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் அபாயங்களை நிர்வகித்தல் உள்ளிட்ட குழந்தைப் பாதுகாப்புப் பிரச்சினைகளுக்கு எவ்வாறு பதிலளிப்பது (8.3)
  - குழந்தைக்குஏற்படும் தீங்கு வெளிப்படுத்தும் நபரை எவ்வாறு ஆதரிப்பது (8.3)

---

[23] உங்கள் நிறுவனத்தின் இயல்பு அல்லது பண்புகளுக்கு ஏற்ப இந்த வழிகாட்டியில் முன்மொழியப்பட்டதை விட நீங்கள் வேறு ஏதாவது செய்ய வேண்டியிருக்கலாம். அப்படியானால், உங்கள் அணுகுமுறை எவ்வாறு முடிவுகள் மற்றும் தரநிலைகளின் குறைந்தபட்ச தேவைகளுக்கு இணங்குகிறது என்பதை நீங்கள் விளக்க வேண்டும். சில துறைகள் மற்றும் நிறுவனங்கள் குறிப்பிட்ட வழிகாட்டுதலை வழங்கும் இணை-கட்டுப்பாட்டாளர்களைக் கொண்டுள்ளன. உங்கள் நிறுவனத்திற்கு இணை-கட்டுப்பாட்டாளரின் வழிகாட்டுதல் பொருந்தி, அது இந்த வழிகாட்டியில் இருந்து வேறுபட்டால், உங்கள் நிறுவனம் அந்தத் துறையில் உங்கள் செயல்பாடுகளுக்கு இணை-கட்டுப்பாட்டாளரின் வழிகாட்டுதலைப் பின்பற்ற வேண்டும்.

  - நிறுவனத்தில் கலாச்சார ரீதியாகப் பாதுகாப்பானச் சூழலை எவ்வாறு உருவாக்குவது. (8.4)
- பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் பயிற்சி முடித்ததை ஒரு பயிற்சிப் பதிவேடு பதிவு செய்கிறது. (8.1, 8.2, 8.3, 8.4)

## செயல்கள்

- குழந்தைப் பாதுகாப்பு பயிற்சி கட்டாயமானது என்று தலைவர்கள் ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்களிடம் தெரிவிக்க வேண்டும். (8.1, 8.2, 8.3, 8.4)
- குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக் கொள்கை குறித்து ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு ஆரம்பப் பயிற்சியிலும் சீரான இடைவெளியிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது. (8.1)
- ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்குப் பின்வருவனவற்றில் அவர்களின் திறனை ஆதரிக்கும் பயிற்சி வழங்கப்படுகிறது:
  - சிறுவர் துர்பிரயோகம் மற்றும் தீங்கின் அறிகுறிகளை அடையாளம் காண (8.2)
  - உள் மற்றும் வெளிப்புற அறிக்கையிடல் தேவைகள், குடும்பங்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கு அறிவித்தல் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் அபாயங்களை நிர்வகித்தல் உள்ளிட்ட குழந்தைப் பாதுகாப்பு பிரச்சினைகளுக்கு பதிலளிப்பதற்கு (8.3)
  - குழந்தைக்கு ஏற்படும் தீங்கு பற்றி வெளிப்படுத்தும் நபரை ஆதரித்தல் (8.2, 8.3)
  - நிறுவனத்தில் கலாசார ரீதியாகப் பாதுகாப்பானச் சூழலை உருவாக்குதல். (8.4)
- குழந்தைப் பாதுகாப்பு குறித்த பயிற்சி மற்றும் வழிகாட்டுதல்:
  - குழந்தைகளுடனான நிறுவனத்தின் ஈடுபாடு மற்றும் நிறுவனத்தில் உள்ள குழந்தைகளின் தேவைகளுக்குப் பொருத்தமானது
  - பேரதிர்ச்சி - அறிவிக்கப்பட்டது
  - ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் தங்கள் திறன்களையும் அறிவையும் புதுப்பித்த நிலையில் வைத்திருக்க வழக்கமான அடிப்படையில் வழங்கப்படுகிறது
  - தொடர்ந்து மதிப்பாய்வு செய்யப்பட்டு பயனுள்ளதாக இருக்கும் வகையில் புதுப்பிக்கப்படுகிறது. (8.1, 8.2, 8.3, 8.4)
- ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்களின் மேற்பார்வை மற்றும் மேலாண்மையானது குழந்தைப் பாதுகாப்பு பயிற்சித் தேவைகளைக் கண்டறிவதை உள்ளடக்கியது. (8.1, 8.2, 8.3, 8.4)

# தரநிலை 9: இயல் மற்றும் நிகழ்நிலைச் சூழல்கள் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துகிறது, அதே நேரத்தில் குழந்தைகள் மற்றும் இளம்வயதினர் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்பைக் குறைக்கிறது

**குழந்தைப் பாதுகாப்பு தரநிலை 9 க்கு இணங்க ஒரு நிறுவனம், குறைந்தபட்சம் பின்வருவனவற்றை உறுதி செய்ய வேண்டும்:**

9.1 குழந்தையின் தனியுரிமை, தகவல் அணுகல், சமூக இணைப்புகள் மற்றும் கற்றல் வாய்ப்புகளுக்கான உரிமையை சமரசம் செய்யாமல், நிகழ்நிலையில் மற்றும் இயல் சூழல்களில் ஏற்படும் அபாயங்களை பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் கண்டறிந்து அவற்றைத் தீர்க்கவேண்டும்.

9.2 நிறுவனத்தின் நடத்தை விதிகள், குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு கொள்கை மற்றும் நடைமுறைகளுக்கு ஏற்ப நிகழ்நிளைச் சூழல் பயன்படுத்தப்படுகிறது.

9.3 இடர் மேலாண்மைத் திட்டங்கள் நிறுவன அமைப்பு, செயல்பாடுகள் மற்றும் சூழல் ஆகியவற்றால் ஏற்படும் அபாயங்களைக் கருத்தில் கொள்கின்றன.

9.4 மூன்றாம் தரப்பினரிடமிருந்து ஒப்பந்த வசதிகள் மற்றும் சேவைகளைப் பெறும் நிறுவனங்கள் குழந்தைகள் மற்றும் இளம்வயதினரின் பாதுகாப்பை உறுதி செய்யும் கொள்முதல் கொள்கைகளைக் கொண்டுள்ளன.

## முக்கியமான கருத்துகள்

- நிறுவனங்களில் ஆபத்தை அடையாளம் கண்டு நிர்வகிப்பது குழந்தைகளைத் தீங்கில் இருந்து பாதுகாப்பாக வைத்திருப்பதில் ஒரு அடிப்படை படியாகும். இடர் மேலாண்மை அணுகுமுறையைக் கடைப்பிடிப்பதன் மூலம், குழந்தைகள் தீங்கு அல்லது துர்பிரயோகத்திற்கு ஆளாகும் வாய்ப்பை ஒரு நிறுவனம் தீவிரமாகக் குறைக்க முடியும்.
- குழந்தைப் பாதுகாப்புத் தரநிலைகளின் நோக்கத்திற்காக, 'ஆபத்து' என்பது ஒரு குழந்தைக்கு ஒரு நிறுவனத்துடன் தொடர்புடைய தீங்கு அல்லது துர்பிரயோகம் ஏற்படுவதற்கான வாய்ப்பாகும். இதில் நிறுவனத்தில் இருந்து அல்லது அதனுடன் தொடர்புடைய நபர்களால் குழந்தைகளுக்கு ஏற்படும் அபாயங்கள், நிறுவனம் மேற்கொள்ளும்

செயல்பாடுகள் மற்றும் அதன் இயல் மற்றும் நிகழ்நிலையில் சூழல்களில் ஏற்படும் அபாயங்கள் ஆகியவை அடங்கும்.

- அனைத்து நிறுவனங்களும் தாங்கள் ஈடுபடும் குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய அபாயங்களை ஆய்வு செய்து புரிந்து கொள்ள வேண்டும். நிறுவன அமைப்பு மற்றும் கலாசாரம், செயல்பாடுகள் மற்றும் இயல் மற்றும் நிகழ்நிலைச் சூழல்களால் உருவாக்கப்படும் ஆபத்துகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டியது அவசியம், அத்துடன் புதிய ஆபத்துக்கள் எழும் போது அவற்றை நிவர்த்தி செய்வதும் அவசியம்.
- ஆபத்தைக் கண்டறிந்து நிர்வகிக்கும் போது, ஒரு குறிப்பிட்ட செயல்பாடு அல்லது அணுகுமுறையின் மூலம் குழந்தைகளுக்கு ஏற்படும் நன்மைகளுக்கு எதிராக தீங்கு மற்றும் துர்பிரயோகத்தின் அபாயத்தை நிர்வகிப்பதற்கான அவசியத்தை சமநிலைப்படுத்துவது முக்கியம்.
- நிகழ்நிலைத் தொழில்நுட்பங்கள் தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கின்றன, மேலும் பெற்றோர்கள், பராமரிப்பாளர்கள் மற்றும் நிறுவன ஊழியர்களை விட குழந்தைகள் பெரும்பாலும் இந்த மாற்றங்களுக்கு ஏற்ப முன்னேறுகிறார்கள். உங்கள் நிறுவனத்தின் நடத்தை விதிகளில் நிகழ்நிலையில் நடத்தை உள்ளடக்கப்பட வேண்டும், மேலும் குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளிலும் நிகழ்நிலைச் சூழலைக் கவனிக்க வேண்டும்.
- மூன்றாம் தரப்பினருடனான ஏற்பாடுகள் அல்லது ஒப்பந்தங்கள் கூட குழந்தைப் பாதுகாப்பு அபாயங்களை முன்வைக்கலாம். அவர்கள் அறியாத நபர்களை அல்லது அதே அளவிலான குழந்தைப் பாதுகாப்பு பரிசோதனைக்கு உட்படுத்தப்படாத நபர்களை நிறுவனத்துடன் தொடர்புடைய குழந்தைகளுடன் தொடர்பு கொள்ள வைக்கலாம்.
- நிறுவனத்துடன் தொடர்புடைய குழந்தைகளுக்கு மூன்றாம் தரப்பினரால் நேரிடும் அபாயங்கள் ஏதேனும் இருந்தால், அவற்றை நிறுவனங்கள் கருத்தில் கொண்டு, அடையாளம் கண்டு நிர்வகிக்க வேண்டும்.
- இடர் மதிப்பீடு மற்றும் மேலாண்மை வார்ப்புருக்கள் நிறுவனங்கள் தங்கள் குழந்தைப் பாதுகாப்பு இடர் மதிப்பீடுகள் மற்றும் மேலாண்மை திட்டத்தை முடிக்க உதவுவதற்காக உருவாக்கப்பட்டுள்ளன.

## இணக்கக் குறிகாட்டிகள்

### இந்தத் தரநிலையை மதிப்பிடும்போது ஆணையம் எதைக் கவனிக்கும்?

பொதுவாக, இந்த ஆவணங்களைச் சமர்ப்பித்து, இந்தத் தரநிலையை அடைய ஆதரிக்கும் விதத்தில் நிறுவனங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டால், அவை இணக்கமாக இருக்கும்.[24]

#### ஆவணங்கள்

- இடர் மதிப்பீடு என்பது நிறுவனத்துடன் தொடர்புடைய இயல் மற்றும் ஆன்லைன் சூழல்களில் குழந்தை துர்பிரயோகம் மற்றும் தீங்கின் அபாயங்களை அடையாளம் காட்டுகிறது. (9.1, 9.3)
- குழந்தை துர்பிரயோகம் மற்றும் தீங்கின் அடையாளம் காணப்பட்ட ஒவ்வொரு ஆபத்தையும் தடுக்க அல்லது குறைக்க நிறுவனம் எடுக்கும் நடவடிக்கைகளை இடர் மேலாண்மைத் திட்டங்கள் பட்டியலிடுகின்றன. (9.3)
- நடத்தை விதிகள் மற்றும் குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக் கொள்கையானது, இயல் மற்றும் ஆன்லைன் சூழல்களில், அதிக ஆபத்துள்ள செயல்பாடுகள் உட்பட, குழந்தைகளை நிறுவனம் எவ்வாறு பாதுகாப்பாக வைத்திருக்கும் என்பதை அடையாளம் காட்டுகிறது. (9.2, 9.3)
- மூன்றாம் தரப்பு ஒப்பந்தக்காரர்களை ஈடுபடுத்துவது பற்றிய கொள்கைகளில், நிறுவன நடத்தை விதிகள் மற்றும் குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக் கொள்கைக்கு இணங்குவது போன்ற குழந்தை துர்பிரயோகம் மற்றும் தீங்கு போன்ற அபாயங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான செயல்முறைகளை உள்ளடக்க வேண்டும். (9.4)

#### செயல்கள்

- பணியாளர்கள், தன்னார்வலர்கள் மற்றும் குழந்தைகளின் கருத்துகள் மற்றும் கவலைகளுக்கு இடர் மதிப்பீடு மற்றும் மேலாண்மைத் திட்டங்கள் பதிலளிக்கின்றன. குழந்தைகளின் தனியுரிமை, தகவல் அணுகல், சமூகத் தொடர்புகள் மற்றும் கற்றல் வாய்ப்புகளுக்கு எதிரான தீங்கு மற்றும் துர்பிரயோகத்தின் அபாயத்தை நிர்வகிப்பதற்கான

[24] உங்கள் நிறுவனத்தின் இயல்பு அல்லது பண்புகளுக்கு ஏற்ப இந்த வழிகாட்டியில் முன்மொழியப்பட்டதை விட நீங்கள் வேறு ஏதாவது செய்ய வேண்டியிருக்கலாம். அப்படியானால், உங்கள் அணுகுமுறை எவ்வாறு முடிவுகள் மற்றும் தரநிலைகளின் குறைந்தபட்ச தேவைகளுக்கு இணங்குகிறது என்பதை நீங்கள் விளக்க வேண்டும். சில துறைகள் மற்றும் நிறுவனங்கள் குறிப்பிட்ட வழிகாட்டுதலை வழங்கும் இணை-கட்டுப்பாட்டாளர்களைக் கொண்டுள்ளன. உங்கள் நிறுவனத்திற்கு இணை-கட்டுப்பாட்டாளரின் வழிகாட்டுதல் பொருந்தி, அது இந்த வழிகாட்டியில் இருந்து வேறுபட்டால், உங்கள் நிறுவனம் அந்தத் துறையில் உங்கள் செயல்பாடுகளுக்கு இணை-கட்டுப்பாட்டாளரின் வழிகாட்டுதலைப் பின்பற்ற வேண்டும்.

அவசியத்தை நிறுவனம் சமப்படுத்தியுள்ளது என்பதைத் திட்டங்கள் காட்டுகின்றன. (9.1, 9.3)

- பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு இடர் மேலாண்மைத் திட்டங்கள் வழங்கப்படுகின்றன, அதன் மூலம் அவர்கள் சிறுவர் துர்பிரயோகம் மற்றும் தீங்கின் அபாயங்கள் பற்றி அறிந்திருக்கிறார்கள் மற்றும் அவற்றைத் தடுக்கவும் குறைக்கவும் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை அவர்கள் அறிவார்கள். (9.1)
- குழந்தைகள் துர்பிரயோகம் மற்றும் தீங்கின் அபாயங்களை அடையாளம் காணும்போது தடுக்கவும் குறைக்கவும் நிறுவனத்தில் உள்ள ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்களால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. (9.1)
- இடர் மதிப்பீடுகள் மற்றும் மேலாண்மைத் திட்டங்கள் தொடர்ந்து புதுப்பித்த நிலையில் வைத்திருக்கவும், புகார்கள், கவலைகள் மற்றும் பாதுகாப்புச் சம்பவங்களிலிருந்து படிப்பினைகளை உள்ளடக்கவும் தொடர்ந்து மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. (9.1, 9.2)
- நிறுவனத்தின் தலைமை மற்றும் நிர்வாக ஏற்பாடுகளானவை சிறுவர் துர்பிரயோகம் மற்றும் தீங்கு விளைவிக்கும் அபாயங்களைக் கண்டறிதல், தடுப்பது மற்றும் குறைப்பதில் இடர் மதிப்பீடு மற்றும் மேலாண்மை கவனம் செலுத்துவதை உறுதி செய்கிறது. (இணைப்புகள் 2.5)
- மூன்றாம் தரப்பினருடன் ஒப்பந்தங்கள் குறித்த பேச்சுவார்த்தை நடத்தும்போது, மூன்றாம் தரப்பினர் எதிர்பார்க்கப்படும் குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு தரநிலைகளைப் பூர்த்தி செய்யவில்லை என்றால், அவர்கள் மீது நிறுவனம் நடவடிக்கை எடுக்க அனுமதிக்கும் விதிமுறைகள் ஒப்பந்தங்களில் அடங்கும். (9.4)
- மூன்றாம் தரப்பு ஒப்பந்தக்காரர்கள் ஈடுபடும் போது, மூன்றாம் தரப்பு ஒப்பந்ததாரர்களின் ஈடுபாடு குழந்தை துர்பிரயோகம் மற்றும் தீங்கு நேரிடும் அபாயங்களை எந்த அளவிற்கு ஏற்படுத்துகிறது என்பதை மதிப்பிடுவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுக்கிறது. (9.4)
- மூன்றாம் தரப்பு ஒப்பந்தக்காரர்களால் ஏற்படும் அபாயத்தின் அளவைப் பொறுத்து, குழந்தை துர்பிரயோகம் அல்லது தீங்கு விளைவிக்கும் அபாயங்களைத் தடுக்க அல்லது குறைக்க நிறுவனம் நடவடிக்கை எடுக்க வேண்டும். பொருத்தமான செயல்களில் பின்வருவன அடங்கும்:
  - மூன்றாம் தரப்பு ஒப்பந்தக்காரர்கள் நிறுவனத்தின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கு இணங்க வேண்டும்
  - குழந்தைப் பாதுகாப்பு தரநிலைகள் மற்றும்/அல்லது நிறுவனத்தின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுடன் மூன்றாம் தரப்பு ஒப்பந்ததாரர்களின் இணக்கத்தைக் கண்காணித்தல்

- குழந்தை துரபிரயோகம் மற்றும் தீங்கு விளைவிக்கும் அபாயங்களை அடையாளம் காணவும், தடுக்கவும் மற்றும் குறைக்கவும் மூன்றாம் தரப்பு ஒப்பந்தக்காரர்களுடன் இணைந்து பணியாற்றுதல்
  - மூன்றாம் தரப்பு ஒப்பந்தக்காரர்களால் ஏற்படும் குழந்தைகள் துர்பிரயோகம் மற்றும் தீங்கு போன்ற அபாயங்களை ஒரு நிறுவனத்தால் போதுமான அளவில் நிர்வகிக்க முடியவில்லை என்றால், ஒப்பந்தத்தை நிறுத்த வேண்டும் அல்லது குழந்தைகளைப் பாதுகாக்க வேறு பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். (9.4)

- பொருத்தமாக இருந்தால், பணியாளர்கள், தன்னார்வலர்கள், பெற்றோர்கள், பராமரிப்பாளர்கள் மற்றும் குழந்தைகளுக்கு நிகழ்நிலையில் பாதுகாப்பு மற்றும் நிகழ்நிலைச் சூழலில் ஏற்படும் ஆபத்துகள், அதாவது நிகழ்நிலையில் சீர்ப்படுத்தல், இணைய மிரட்டல் மற்றும் செக்ஸ்டிங் போன்ற தகவல்கள் வழங்கப்படுகின்றன. எதிர்மறை அனுபவங்கள் அல்லது கவலைகளைப் புகாரளிக்க ஆதரவு வழங்கப்படுகிறது. (9.2)

# தரநிலை 10: குழந்தைப் பாதுகாப்பு தரநிலைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்ந்து மதிப்பாய்வு செய்யப்பட்டு மேம்படுத்தப்படுகிறது

**குழந்தைப் பாதுகாப்பு தரநிலை 10 க்கு இணங்க ஒரு நிறுவனம், குறைந்தபட்சம் பின்வருவனவற்றை உறுதி செய்ய வேண்டும்:**

10.1 குழந்தைப் பாதுகாப்பு நடைமுறைகளை நிறுவனம் தொடர்ந்து மதிப்பாய்வு செய்கிறது, மதிப்பீடு செய்கிறது மற்றும் மேம்படுத்துகிறது.

10.2 புகார்கள், கவலைகள் மற்றும் பாதுகாப்பு சம்பவங்கள் தொடர்ச்சியான முன்னேற்றத்தைத் தெரிவிப்பதற்கும் காரணங்கள் மற்றும் முறையானத் தோல்விகளை அடையாளம் காண்பதற்கும் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

10.3 தொடர்புடைய மதிப்புரைகளின் கண்டுபிடிப்புகள் குறித்து நிறுவனமானது ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்கள், சமூகம் மற்றும் குடும்பங்கள் மற்றும் குழந்தைகள் மற்றும் இளம்வயதினருக்குத் தெரிவிக்கிறது.

## முக்கியமான கருத்துகள்

- ஒரு குழந்தைப் பாதுகாப்பான நிறுவனமாக இருப்பது ஒரே முறையில் எட்டிவிட முடியாது, அதற்கு தொடர்ந்து முயற்சிகள் செய்துகொண்டே இருக்கவேண்டும். குழந்தைப் பாதுகாப்பு நிறுவனங்கள் திறந்த மற்றும் வெளிப்படையான கலாசாரத்தைக் கொண்டுள்ளன, தங்கள் தவறுகளிலிருந்து கற்றுக்கொள்கின்றன மற்றும் குழந்தைகளின் நலன்களை முதன்மைப்படுத்துகின்றன.
- உங்கள் கொள்கைகள், செயல்முறைகள் மற்றும் நடைமுறைகள் போதுமானவை, புதுப்பித்தவை மற்றும் பயனுள்ளவை என்பதை வழக்கமான மதிப்பாய்வுகள் மூலம் சரிபார்க்க வேண்டும், மேலும் அவை முழுமையாக செயல்படுத்தப்பட்டு அனைவராலும் பின்பற்றப்பட வேண்டும்.
- புதுப்பித்த மற்றும் பயனுள்ள கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைப் பராமரிக்க வருடாந்திர மதிப்பாய்வு ஒரு நல்ல நடைமுறையாகும். வேகமாக மாறிவரும் சூழலில், அடிக்கடி மதிப்பாய்வு தேவைப்படலாம்.
- புகார்கள், கவலைகள் மற்றும் பாதுகாப்பு சம்பவங்களைப் பார்ப்பது மதிப்பாய்வுக்கு முக்கியமானது, உங்கள் நிறுவனத்தின் குழந்தைப் பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் நடைமுறைகளின் செயல்திறனைப் பற்றிய தகவலை வழங்குகிறது, மேலும் துர்பிரயோகம் அல்லது

தீங்குகளைத் தடுக்க மாற்றங்கள் தேவைப்படும் பகுதிகளைக் கண்டறிய உதவுகின்றது.

- புகார்கள், கவலைகள் மற்றும் பாதுகாப்பு சம்பவங்கள் பற்றிய உங்கள் பகுப்பாய்வு பின்வருவனவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும்:
  - ஒவ்வொரு விடயத்திற்கும் பின்னால் உள்ள அடிப்படை காரணங்கள் அல்லது சிக்கல்கள்
  - உங்கள் கொள்கைகள், செயல்முறைகள் அல்லது நடைமுறைகளில் உள்ள இடைவெளிகள் அல்லது தோல்விகளின் அறிகுறிகள்
  - நடத்தைகள், நடைமுறைகள், சம்பவங்கள் அல்லது தவறவிடவிருந்த முறைகள்
  - உங்கள் நிறுவனத்தில் உள்ளவர்கள் உங்கள் குழந்தைப் பாதுகாப்புக் கொள்கைகளைப் பின்பற்றுவது எப்படி என்பதைப் புரிந்து கொள்ளாமல் இருக்கலாம் என்பதற்கான அறிகுறிகள்
  - அடையாளம் காணப்பட்ட சிக்கல்களைத் தீர்க்க என்ன மாற்ற வேண்டும்.
- மதிப்பாய்வின் கண்டுபிடிப்புகளைப் புகாரளிக்கும் போது, நீங்கள் பின்வருவனவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும்:
  - சரியான நேரத்தில் கண்டுபிடிப்புகளைப் பகிரவும், அதன் மூலம் அவை தற்போதையதாகவும் அர்த்தமுள்ளதாகவும் இருக்கும்
  - வயதுக்கு ஏற்ற வழிகளில் கண்டுபிடிப்புகளைக் கூறுவதுடன், அவற்றை அணுகவும் புரிந்துகொள்ளவும் எளிதாக இருப்பதை உறுதிசெய்யவும்
  - மதிப்பாய்வுகளிலிருந்து கற்றல்களைப் பகிரவும் மற்றும் குழந்தைப் பாதுகாப்பு நடைமுறைகள் அல்லது அமைப்புகளை மாற்ற அல்லது புதுப்பிக்கும் திட்டங்கள் மற்றும் மாற்றங்கள் எப்போது நிகழும், மற்றும்/அல்லது மேலும் மதிப்புரைகளைக் கோடிட்டுக் காட்டவும்
  - மக்களின் தனியுரிமையைப் பாதுகாக்கவும், சட்டத்தின்படி அல்லது நீங்கள் அவ்வாறு செய்ய உறுதியளித்துள்ள நிலையில் இரகசியத்தன்மையைப் பராமரிக்கவும் நினைவில் கொள்ளுங்கள்
  - ஒரு மதிப்பாய்வைப் பகிரங்கமாகப் புகாரளிப்பது என்பது குறிப்பிடப்பட்ட சம்பவங்களில் சம்பந்தப்பட்ட தரப்பினரை எவ்வாறு பாதிக்கலாம் என்பதைக் கவனியுங்கள் - குறிப்பாக அறிக்கை வெளியிடப்படும் என்று பாதிக்கப்பட்ட உயிர் பிழைத்தவர்களிடம் எச்சரிக்க வேண்டியதன் அவசியத்தைக் கவனியுங்கள்.

## இணக்கக் குறிகாட்டிகள்

### இந்தத் தரநிலையை மதிப்பிடும்போது ஆணையம் எதைக் கவனிக்கும்?

பொதுவாக, இந்த ஆவணங்களைச் சமர்ப்பித்து, இந்தத் தரநிலையை அடைய ஆதரிக்கும் விதத்தில் நிறுவனங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டால், அவை இணக்கமாக இருக்கும்.[25]

#### ஆவணங்கள்

- அனைத்து கொள்கைகளும் நடைமுறைகளும் ஆவணத்தில் சுட்டிக்காட்டப்பட்ட வழக்கமான மதிப்பாய்வு காலத்தைக் கொண்டுள்ளன. (10.1)
- குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு மதிப்புரைகள் மற்றும் கண்டுபிடிப்புகளை அறிக்கைகள் ஆவணப்படுத்துகின்றன. (10.3)

#### செயல்கள்

- புகார்கள், கவலைகள், குற்றச்சாட்டுகள் மற்றும் பதிலளிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய பதிவுகள் வைக்கப்படுகின்றன. (10.1, 10.2, 10.3)
- புகார்கள், கவலைகள், பாதுகாப்புச் சம்பவங்கள் அல்லது கொள்கையில் குறிப்பிடத்தக்க மீறல்கள் (நடத்தை விதிகள் போன்றவை) ஆகியவை பிரச்சனைக்கு காரணமானவை எவை மற்றும் நிறுவனத்தின் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் நடைமுறைகளில் ஏதேனும் குறைபாடுகள் உள்ளதா என்பதைப் புரிந்து கொள்ள ஆய்வு செய்யப்படுகிறது. குறைபாடுகள் அல்லது தோல்விகள் அடையாளம் காணப்பட்டால், சிக்கல் மீண்டும் நிகழாமல் தடுக்க மேம்பாடுகள் செய்யப்படுகின்றன. (10.1, 10.2)
- கொள்கைகள், செயல்முறைகள் மற்றும் குழந்தைப் பாதுகாப்பு நடைமுறைகள் ஆகியவற்றை நிறுவனம் தொடர்ந்து மதிப்பாய்வு செய்கிறது, மேலும் இவற்றைக் கருத்தில் கொண்டு மேம்பாடுகளைச் செய்கிறது:
  - புகார்கள், கவலைகள், பாதுகாப்பு சம்பவங்கள் மற்றும் கொள்கையின் குறிப்பிடத்தக்க மீறல்கள் ஆகியவற்றின் பகுப்பாய்வு
  - ஊழியர்கள், தன்னார்வலர்கள், குழந்தைகள், குடும்பங்கள் மற்றும் சமூகங்களிடமிருந்து கோரப்பட்ட பின்னூட்டம்

---

[25] உங்கள் நிறுவனத்தின் இயல்பு அல்லது பண்புகளுக்கு ஏற்ப இந்த வழிகாட்டியில் முன்மொழியப்பட்டதை விட நீங்கள் வேறு ஏதாவது செய்ய வேண்டியிருக்கலாம். அப்படியானால், உங்கள் அணுகுமுறை எவ்வாறு முடிவுகள் மற்றும் தரநிலைகளின் குறைந்தபட்ச தேவைகளுக்கு இணங்குகிறது என்பதை நீங்கள் விளக்க வேண்டும். சில துறைகள் மற்றும் நிறுவனங்கள் குறிப்பிட்ட வழிகாட்டுதலை வழங்கும் இணை-கட்டுப்பாட்டாளர்களைக் கொண்டுள்ளன. உங்கள் நிறுவனத்திற்கு இணை-கட்டுப்பாட்டாளரின் வழிகாட்டுதல் பொருந்தி, அது இந்த வழிகாட்டியில் இருந்து வேறுபட்டால், உங்கள் நிறுவனம் அந்தத் துறையில் உங்கள் செயல்பாடுகளுக்கு இணை-கட்டுப்பாட்டாளரின் வழிகாட்டுதலைப் பின்பற்ற வேண்டும்.

- – குழந்தைப் பாதுகாப்பு தரநிலைகள் ஒவ்வொன்றையும் நிறுவனம் முழுமையாக செயல்படுத்தியுள்ளதா. (10.1, 10.2 மற்றும் தரநிலை 3 மற்றும் 4.3க்கான இணைப்புகள்)

- நிறுவனத்தின் குழந்தைப் பாதுகாப்பு நடைமுறைகளின் மதிப்பாய்வுகளுக்கு பதிலளிக்கும் வகையில் எடுக்கப்பட்ட கண்டுபிடிப்புகள் மற்றும் நடவடிக்கைகள் பற்றிய அறிக்கைகள் ஊழியர்கள், தன்னார்வலர்கள், குழந்தைகள், குடும்பங்கள் மற்றும் சமூகங்களுடன் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன. (10.3)

# தரநிலை 11: குழந்தைகள் மற்றும் இளம்வயதினருக்கு நிறுவனம் எவ்வாறு பாதுகாப்பானது என்பதைக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் ஆவணப்படுத்துகின்றன

**குழந்தைப் பாதுகாப்பு தரநிலை 11 க்கு இணங்க ஒரு நிறுவனம், குறைந்தபட்சம் பின்வருவனவற்றை உறுதி செய்ய வேண்டும்:**

11.1 கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் அனைத்து குழந்தைப் பாதுகாப்புத் தரநிலைகளையும் குறிக்கின்றன.

11.2 கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன மற்றும் புரிந்துகொள்ள எளிதானவை.

11.3 சிறந்த நடைமுறை மாதிரிகள் மற்றும் பங்குதாரர் ஆலோசனை கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் வளர்ச்சியைத் தெரிவிக்கிறது.

11.4 கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுடன் இறங்குவதற்குத் தலைவர்கள் முன்மாதிரியாக இருக்கிறார்கள்.

11.5 பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைப் புரிந்துகொண்டுச் செயல்படுத்துகின்றனர்.

## முக்கியமான கருத்துகள்

- அனைத்து தரநிலைகளையும் செயல்படுத்துவதற்கான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை ஆவணப்படுத்துவது, குழந்தைப் பாதுகாப்பு முக்கியம் என்ற செய்தியை நிறுவனத்துடன் தொடர்புடைய அனைவருக்கும் அனுப்புகிறது. விருப்பமான நடைமுறைகளை மனதில் வைத்திருப்பது போதாது அல்லது நிறுவனத்தில் உள்ள அனைவரும் ஏற்கனவே சரியானதைச் செய்கிறார்கள் என்று நம்புவதும் போதாது. விதிகள் மற்றும் எதிர்பார்ப்புகள் எழுதப்பட்டு கொள்கையில் முறைப்படுத்தப்பட வேண்டும், எனவே அதன் மூலம் அவை பகிரப்பட்டு உங்கள் நிறுவனம் முழுவதும் குழந்தைப் பாதுகாப்பை தொடர்ந்து உட்பொதிக்கப் பயன்படுத்தப்படும்.
- குழந்தைப் பாதுகாப்புச் சிக்கல்களைத் தடுப்பது மற்றும் பதிலளிப்பது மற்றும் நிறுவனம் நல்வாழ்வை எவ்வாறு மேம்படுத்துகிறது என்பதை விவரிப்பதன் மூலம் கொள்கைகளும் நடைமுறைகளும் உங்கள் நிறுவனத்தில் உள்ளவர்களுக்கு வழிகாட்டும். 'கொள்கைகள்' என்பது நிறுவனத்தின் ஆவணப்படுத்தப்பட்ட விதிகள், எதிர்பார்ப்புகள் மற்றும் நிலைப்பாடுகளாகும். 'செயல்முறைகள்' என்பது நிறுவனத்தின் கொள்கைகளை செயல்படுத்தும் ஆவணப்படுத்தப்பட்ட செயல்கள் மற்றும் செயல்முறைகளாகும்.

- சில குழந்தைப் பாதுகாப்புச் சிக்கல்களுக்குப் பதிலளிப்பது சிக்கலானதாக இருக்கலாம், ஆனால் உங்கள் நிறுவனத்தின் கொள்கைகளை முடிந்தவரை எளிமையாக எழுத வேண்டும். கொள்கைகள் பார்வையாளர்களை மனதில் கொண்டு எழுதப்பட வேண்டும், அதைப் புரிந்துகொள்ள வேண்டிய அனைவருக்கும் அணுகக்கூடிய மொழியைப் பயன்படுத்துவதில் கவனமாக இருக்க வேண்டும்.

- தனியாகக் கொள்கைகளை உருவாக்கினால் பயனுள்ள கொள்கைகளை உருவாக்குவது கடினம் - அவற்றை செயல்படுத்த வேண்டியவர்கள் மற்றும் அவற்றால் பாதிக்கப்படுபவர்களிடம் இருந்து கொள்கைகளின் வளர்ச்சி குறித்து ஆலோசனை பெற வேண்டும். கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் வளர்ச்சியில் குழந்தைகள், குடும்பங்கள் மற்றும் சமூகங்களின் கருத்தைக் கூற நிறுவனங்கள் வாய்ப்பை வழங்க வேண்டும்.

- பெரும்பாலான குழந்தைப் பாதுகாப்பு விஷயங்கள் தனிப்பட்டவை அல்ல மேலும் பிற நிறுவனங்கள், உச்ச அமைப்புகள், வல்லுநர்கள் மற்றும் கல்வியாளர்களால் முன்பே கருதப்பட்டது. மற்றவர்களின் அனுபவங்கள் மற்றும் கிடைக்கக்கூடிய ஆராய்ச்சி மற்றும் எழுதப்பட்ட வழிகாட்டுதலின் மூலம் வழங்கப்பட்ட நுண்ணறிவுகளைக் காண்பது மூலம், குழந்தைகளுக்கான சிறந்த முடிவுகளை உங்கள் நிறுவனம் உருவாக்க முடியும்.

- இணக்கத்திற்கு முன்மாதிரியாக இருப்பது என்றால், தலைவர்கள் குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வின் முக்கியத்துவம் குறித்து ஒரு செயலூக்கமான, வெளிப்படையான அணுகுமுறையை மேற்கொள்வது என்று அர்த்தம். குழந்தைப் பாதுகாப்பு விஷயங்களை தீவிரமாக எடுத்துக்கொள்வதில், உடனடியாக முழுமையாகப் பதிலளிப்பதில், ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு நிறுவனம் முழுவதும் குழந்தைப் பாதுகாப்பு நடைமுறைகளை உட்பொதிக்கத் தேவையான நேரத்தையும் வளங்களையும் வழங்குவதில் தலைவர்கள் தங்கள் பேச்சை நடைமுறைப்படுத்த வேண்டும்.

- உங்கள் நிறுவனத்தில் உள்ள பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் குழந்தை பாதுகாப்பு நிறுவனத்தை உருவாக்குவதில் முக்கியமான பகுதியாக உள்ளனர், மேலும் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை நடைமுறைப்படுத்தத் தேவையான தகவல் மற்றும் ஆதரவு அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

## இணக்கக் குறிகாட்டிகள்

### இந்தத் தரநிலையை மதிப்பிடும்போது ஆணையம் எதைக் கவனிக்கும்?

பொதுவாக, இந்த ஆவணங்களைச் சமர்ப்பித்து, இந்தத் தரநிலையை அடைய ஆதரிக்கும் விதத்தில் நிறுவனங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டால், அவை இணக்கமாக இருக்கும்.[26]

#### ஆவணங்கள்

- குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக் கொள்கையானது, ஒவ்வொரு குழந்தைப் பாதுகாப்பு தரநிலைகள் தொடர்பாகவும் நிறுவனத்தின் எதிர்பார்ப்புகள், நடைமுறைகள் மற்றும் அணுகுமுறையை அமைக்கிறது. (11.1, 11.2 மற்றும் 2.3க்கான இணைப்புகள்)
- ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்களின் நடத்தை மற்றும் பொறுப்புகளுக்கான எதிர்பார்ப்புகளை நடத்தை விதிகள் அமைக்கின்றன. (11.1, 11.2 மற்றும் 2.4க்கான இணைப்புகள்)
- இடர் மதிப்பீடு மற்றும் மேலாண்மைத் திட்டங்கள் சிறுவர் துர்பிரயோகம் மற்றும் தீங்கின் அபாயங்களைக் கவனிக்கின்றன. (11.1, 11.2 மற்றும் 9.1 மற்றும் 9.3க்கான இணைப்புகள்)
- புகார்க் கையாளுதல் கொள்கை மற்றும் செயல்முறைகள் நிறுவனம் எவ்வாறு பதிலளிக்கும் மற்றும் அனைத்து உள் மற்றும் வெளிப்புற அறிக்கையிடல் கடப்பாடு குறிக்கிறது. (11.1, 11.2 மற்றும் தரநிலை 7க்கான இணைப்புகள்)
- நிறுவன ஆட்சேர்ப்பு, மனித வளங்கள் மற்றும் தன்னார்வக் கொள்கைகள் குழந்தை பாதுகாப்புக்குத் தெளிவான கவனம் செலுத்துகின்றன. (11.1, 11.2 மற்றும் தரநிலை 6க்கான இணைப்புகள்)
- உங்கள் நிறுவனம் மூன்றாம் தரப்பினரிடமிருந்து வசதிகள் மற்றும்/அல்லது சேவைகளைப் பெற்றால், கொள்முதல் கொள்கைகள் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்கின்றன. (11.1, 11.2 மற்றும் 9.4க்கான இணைப்புகள்)

[26] உங்கள் நிறுவனத்தின் இயல்பு அல்லது பண்புகளுக்கு ஏற்ப இந்த வழிகாட்டியில் முன்மொழியப்பட்டதை விட நீங்கள் வேறு ஏதாவது செய்ய வேண்டியிருக்கலாம். அப்படியானால், உங்கள் அணுகுமுறை எவ்வாறு முடிவுகள் மற்றும் தரநிலைகளின் குறைந்தபட்ச தேவைகளுக்கு இணங்குகிறது என்பதை நீங்கள் விளக்க வேண்டும். சில துறைகள் மற்றும் நிறுவனங்கள் குறிப்பிட்ட வழிகாட்டுதலை வழங்கும் இணை-கட்டுப்பாட்டாளர்களைக் கொண்டுள்ளன. உங்கள் நிறுவனத்திற்கு இணை-கட்டுப்பாட்டாளரின் வழிகாட்டுதல் பொருந்தி, அது இந்த வழிகாட்டியில் இருந்து வேறுபட்டால், உங்கள் நிறுவனம் அந்தத் துறையில் உங்கள் செயல்பாடுகளுக்கு இணை-கட்டுப்பாட்டாளரின் வழிகாட்டுதலைப் பின்பற்ற வேண்டும்.

### செயல்கள்

- உங்கள் நிறுவனத்தில் ஈடுபட்டுள்ள அனைவருடனும் குழந்தைப் பாதுகாப்பு குறித்த வழக்கமான ஆலோசனை மேற்கொள்ளப்படுகிறது. (11.3 மற்றும் தரநிலைகள் 3 மற்றும் 4க்கான இணைப்புகள்)
- குழந்தைப் பாதுகாப்பு தொடர்பான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை உருவாக்க, மதிப்பாய்வு மற்றும் புதுப்பிக்க உதவுவதற்காக, குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை உருவாக்குவது பற்றிய ஆலோசனைகள் மற்றும் கிடைக்கக்கூடிய தகவல்களை நிறுவனம் பயன்படுத்துகிறது. (11.3)
- நிறுவனத்தின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் அனைத்து குழந்தைப் பாதுகாப்பு தரநிலைகளையும் உள்ளடக்கியது மற்றும் நிறுவனத்திற்கும் அதன் சுற்றுச்சூழலுக்கும் தொடர்பான குழந்தைப் பாதுகாப்பு அபாயங்களை நிவர்த்தி செய்கிறது. (11.1)
- கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் புரிந்து கொள்ள எளிதானது மற்றும் எளிதாக அணுக முடியும். (11.2)

விக்டோரியா முழுவதிலும் உள்ள நிலங்களின் பாரம்பரிய உரிமையாளர்களை ஆணையம் மரியாதையுடன் அங்கீகரித்து கொண்டாடுகிறது மற்றும் கடந்த, தற்போதைய மற்றும் வருங்கால சந்ததியினரின் முதியவர்கள், குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு தனது மரியாதையைச் செலுத்துகிறது.

© குழந்தைகள் மற்றும் இளம்வயதினருக்கான ஆணையம் 2023

இந்தப் பணி காப்புரிமை பெற்றது. *பதிப்புரிமைச் சட்டம் 1968* இன் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள எந்தவொரு பயன்பாட்டிற்கும் மேலாக, குழந்தைகள் மற்றும் இளம்வயதினருக்கான ஆணையத்தின் முன் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தப் பகுதியையும் மீண்டும் உருவாக்க முடியாது, நிலை 18, 570 போர்க் ஸ்ட்ரீட், மெல்போர்ன் 3000.

**குழந்தைகள் மற்றும் இளம்வயதினர்களுக்கான ஆணையம்**

நிலை 18, 570 போர்க் தெரு
மெல்போர்ன், விக்டோரியா, 3000

DX210229

தொலைபேசி: 1300 78 29 78
மின்னஞ்சல்: contact@ccyp.vic.gov.au
இணையம்: ccyp.vic.gov.au

எங்களை இதில் கண்டுபிடியுங்கள்:
Instagram
Facebook
Twitter